தொண்டன்

V 4 NO. 39 1 Oct 1931

JL
ஐ211, N28KN
N31·4·39
188937

834

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

7-NOV 1931

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஞ அக்டோபர் மீ 1உ [No. 39

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 761
2. ஆண்டாள்—(கோதையார் கவி)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 763
3. கந்தபுராணமும் சங்கநூல்களும்
பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 765
4. சிஷ்டாசாரமும் அதன் அம்சங்களும் (ஸ்ரீமான் இராதாகிருஷ்ணன் சொற்பொழிவு)
V. K. இராமநாதன் B.A. B.L. 766
5. சிதம்பரதேவர் சரிதம்
Dr. V. S. அருணாசலம்பிள்ளை 768
6. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் 138 - 148)
K. இராமரத்நம் ஐயர் B.A. 770
7. யாப்பிலக்கணம் (நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா) 772
8. களவியற்றுறை விளக்கம்—'சம்பந்தன்' 774
9. கம்பராமாயணம் (சித்திரகூடப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 776
10. வர்த்தமானம். 779

கலாநிலயம்

188937

மறுப்பது முறுதியாமே 4.

என்னினைத்தோ கடவுள் தன்னை இல்லையில்லையென்றியம்பவைத்துக்கொள்கின்றது? திருவுளத்தின் வண்ணந் தெரியவல்லார் யார்! ஆயினும், அவனன்றி யோரணுவும் அசையா தென்பதுடன், கருணையாலன்றியவன் ஒன்றினையும் அசைக்கவுமாட்டா னென்பதுவுஞ் சாதம். ஆதலின், முரணிய முறையாலேனுங் கடவுள் தன் கருணையைச் செலுத்துகின்றவன் ஆதலுங் கூடும். மற்று, கடவுளென்னுங் கருத்தின் அழகுஅமைதிகளோடு அதின் இன்றியமையாமையையும் உய்த்துஉய்த்து உணரவல்லாதார் மதி கெட்டதென்று கொள்ளவேண்டாவோ எனவும், அன்னணம் கெடுப்பதுங் கடவுளேதா னன்றோ எனவும் ஐயுற்று, இவ்வகை மக்கள்மதியைக் கெடுப்பது கடவுளின் கருணைக்கு உரியதாமோ என்று வியப்பதும் இயற்கையே. இவ்வியப்பினால் எய்தும் மயக்கந் தீர்வதற்கு மூலவல்ல முறையொன் றுளது.

'கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக்கொடுத்தது' என்னுமப் பழமொழியின் பொருளையும் மெய்மையையும் யாவரும் அறிவார். அந்தகருக்கு அறிவுநுட்பம் அதிகம்; அவ்வாறே இல்லாததொன்றிற்கு ஈடுசெய்யப் பிறிதொன்று மிகுந்திருக்கக் காண்கின்றோம். இப்படி யப்பழமொழியின் வழிசார்ந்து விளங்குகின்ற விடயங்கள் கிடக்க, சொற்களின் பொருளையே கொண்டு சோதிக்குமிடத்தும், அது ஆழ்ந்ததோர் உண்மையைத் தன்னுளே அடக்கிக் கொண்டிருப்பதாகவும் முடியலாம். எல்லாவற்றையும் காணவல்ல நமது கண்கள் கடவுளைக் காணக்கூடவில்லை. பிறவுடக் கண்களன்றி இமையாநாட்டத்து அமரருங் கண்டிலர் என்னும் வழக்கு நம்முடைய நூல்களில் மலிந்திருக்கின்றது. எனின், தன்னைக் காணவொட்டாமல் நமது கண்களைக் கடவுள் ஆதிமுதல் கெடுத்துவைத்திருக்கின்றது என்று எண்ணுவதும் ஏற்புடைத்தே. கண்ணைக் கெடுத்தது தெய்வம் என்பதன் உண்மைப் பொருள் இதுவேயென்று கொள்வோம். இனி, கண்களால் காணத்தான் இயலவில்லையேனும், கடவுளைத் தம் மதியினால் தெரிந்துணர்ந்துகொள்ளக்கூடியவர்களாகவே என்றும் மனிதர் இருந்தனர். ஆதலின் கடவுளென்னும் அப் பரம்பொருளின் அழகோடுகூடிய அருளினது இன்பத்தூய்மையை மதியினால் துய்க்கின்ற உரிமையும் பெருமையும் நமக்கு அளித்திருப்பதுமக் கடவுளே என்பதையும் மறக்கலாமோ! கெடுத்துவிட்ட கண்ணிற்கு ஈடாகக் கொடுத்திருப்பது இம்மதியாகும். எனின், கண்ணைக் கெடுத்ததெய்வம் மதியைக் கொடுத்ததென்னும் அம்மூதுரைக்கு இப்பொருளும் போதப் பொருந்தும்.

இவ்வண்ணம் கண்களுக்கு ஈடாகக் கொடுத்திருந்த மதியும் இப்பொழுது கெட்டதே என்று ஏங்கவேண்டியவர்களேயாயினும், ஒருகால் இப்படிக் கெட்ட மதியினுக்கு ஈடுசெய்யக் கண்ணைத்தான் மீண்டுங் கொடுக்கக் கருதியிருக்கின்றதோ கடவுள் என்றுநம்பவுந் துணியலாமே. நிதியுடைய நினைவு இதுவாதலின் அதனால் வரவல்ல நற்பயனுக் கொருநாளு மழிவில்லை.

உலகமக்களின் ஒருபெரும் பகுதியோர் கடவுளை உவப்பாருமலர் வெறுப்பாருமலர். முற்றிலும் மறப்

N31·4·39

பாரே யாவார். எல்லா நிலையிலும் பொல்லாதது இம்மறதிநிலையே. உவப்பாருய்வர்: வெறுத்து மறப்பாரும் ஒருநாள் உய்யினு முய்யலாம்; மறந்தவரோ உய்கதி காண்டலரிது. எல்லாவிதங்களிலும் அலகிலா திருத்தல்போலவே நம்பால் வைத்த அன்பிலு மலகிலாதவர் கடவுள். அன்புடையோர் வேண்டுகின்றகைம்மாறெல்லாம் யாது; தம்மை மறவாதிருக்க வேண்டுமென்பதல்லால் அவர் விழைவது வேறொன்றில்லை. அதனையும் உலோவினுல் அப்புறம் ஆளாவதெப்படியோ! உள்ளவுள்ள ஊறும் உவகையால்புகழ்வது உண்டெனினும் மனமொன்றும் சாராமல் வாயளவிற் சில புகழ்மொழிகள் வழங்கிவிடுதலும் கூடும். ஆதலின் கடவுள் கடவுள் என்று கழறுவோர் அனைவரும் அக்கடவுளை மறவாதாரெனக் கொள்ளற்கில்லை. திருவாசகம் ஒரு கையிலும் நெட்டிருப்புப்பாறை மறுகையிலுமாய்த் திரிபவர் இம்முறணைச் செய்கையாற் செலுத்துபவர். அன்னார் இலக்கணத்தை இவ்வுலகம் நன்கு அறியும். மற்று,மனதின்நிலைக்கும் வாய்மொழிக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்துகொள்வது அத்துணை எளியதன்று. பண்டோர் தலையங்கத்தில் உள்ளொன்றும் வைக்காமல் புறமொன்று பேசுவார் பொருளற்ற தன்மையை நாம் விளக்கியிருப்பது நமது நண்பர்களில் சிலர்நினைவில் இப்பொழுது எய்தலாம்.கடவுளையும் அக்கடவுளின் சமயங்களையும் காப்பதற்கு விரைந்துபல உரைபகர்வாரில் ஒருசாரார் அவ்வுள்ளொன்றும்வைக்காமல் புறமொன்று பேசும் இனத்தைச் சேர்ந்தவராவார். மற்று, கடவுளை மறுத்துப் பழிப்பவர் தம் பிழைகள் யாவையேயாயினும் அவர் மறப்பிற்கு இலக்காகிய கடவுளை நினையாது மறப்பது ஒன்றன்று. மனமும் நினைவுமின்றி ஒருவரை வழக்கமும் மரபும் பற்றி உபசரிக்க இயலும். தெரிந்தவர்களைத்தெருக்களிலேசந்திக்கும்போதுசிரித்துத்தலையசைத்துச்செல்கின்றோம். என்னசிரிப்பு அது? அகத்தோடெழுந்த முகமலர்ச்சியா! நம்முடைய வாய் சிரிக்கின்றது என்கின்றநினைவும்இருப்பதில்லை. எதிர்ப்பட்டது யாரென்றும் கருதுவதில்லை. இனி எதற்குத்தான் சிரித்தோம் என்பதைக் கேட்கவும் வேண்டுமோ! ஒருவரைப் பார்த்து, "சௌக்கியமா" என்று நலம் வினவும்போது அவருடைய சௌக்கியத்தை அறியவேண்டுமே என்னும் ஆவல் நாவினுல் தோன்றுகின்றதன்றி மனத்தின் எந்தமூலையில் எங்குத் தேடினும் எள்ளளவும் காண்டல் அரிது. பொதுக்கூட்டங்களில் தலைவருக்கும் சொற்பொழிவாளர்களுக்கும் வந்தனோபசாரங்கள்கூறி அவர்களுடைய அறிவையும் அருளையும் புகழையும் பாராட்டுவதெல்லாம் தொண்டைக்கு மேலிருந்தே விண்டுவருகின்ற சொற்கள் என்பது அத்தலைவர் சொற்பொழிவாளர் முதல் யாவருமறிந்த இரகசியமே என்பது வெளிப்படை.

இப்படியே, மனத்தோடு கலவாமல் புகழ்பாடிப் பாராட்ட இயலுமேயல்லாது பகைத்து வைவதோ ஒருபோதும் இயலாது. ஒரு பகைவனைப்பற்றிப் பேசுவதனைத்தும் மனத்தின் ஆழத்தினின்றே எழுதல்வேண்டும். செரதுமலை நினையாமல்இருக்கலாம், நண்பனைஒவ்வோர் வேளை மறப்பினும் மறக்கலாம், பகைக்குப் பாத்திரமானவனோ உள்ளத்தினின்று ஒருபோதும் அகல மாட்டான். அப்பகையின்காரணமாக வெளிவருகின்ற மொழிகளும் உள்ளம் கலவாமல் உ[illegible]றுவ தெங்ஙனம்? ஆதலின் நினைவுமறவ[illegible]க்குரிய நேர்மையது பகைமையே யெனப்பகரலாம். இந்தத் தத்துவத்தைக் கடவுளின்சார்பாகக் கருதுமிடத்துப் புலப்படுதற்குரிய உண்மையொன்றுளது.ஜீவகோடிகளிடத்தில் தாயொத்த அன்புதங்கிய கடவுள், தன் நினைவு அகலாத தன்மையையே வேண்டுகின்றார், என முன்னர்க்கூறினோம்.நட்பினுல் நினையாயேனும்பகையுடனேனும் தன்னை நினைத்தாற் போதுமெனும் பரிவினர் அப்பராபரக்கடவுள். நட்பினுல் சிலர் அவருக்கு ஆளாகின்றாரெனின், பகையினுல் சிலரை அவர்தடுத்தாட்கொள்கின்றார் என்னல்வேண்டும். மறவாத மனத்தைத் தருகின்றதாதலின் இப்பகையும், கடவுளை மிகவிரைவில் அடைதற்குரியவோர் நெறியேயாயினும் ஆகலாம். திருநாட்டுக் கடைக்காப்பாளர் ஜய விஜயர் என்பவர், திருமாலைத் தரிசிக்கவந்த தூர்வாஸரைத் தடுத்ததற்கு வெகுண்டு அம்முனி அசுராம்படி அவர்களைச் சபித்ததும், அவர்கள் திருமாலினிடத்தில் முறையிட்டுத் தாம் அசுராய்ப்பிறப்பினும்அவர்பால் அன்பொழியாமதி அருளவேண்டுமென வரம்கேட்டதும், அதற்கு அப்பரமன், தன்பால் பக்தியோடாயின் பிறவிகள் பத்தும், பகையோடாயின் மூன்றே பிறவிகளும் எடுத்துப்பின் தன்னைவந்து அடையலாம் என்றதும், ஜயவிஜயரோ பரமனை விரைவிலடையும் ஆர்வமே அதிகம் உடையராய்ப் பகைத்தேனும் தம்பிறவியை மூன்றினுளளே முடித்துக்கொள்ள நிச்சயித்து இரணியன் இரணியகசிபன், இராவணன் கும்பகர்ணன், சிசுபாலன் தந்தவக்ரன் எனப் பிறந்ததும் நம்முடைய புராணங்களில் சிறிதேனும் பயிற்சியுடைய யாவரும் அறிவர். எம்பெருமான் கழலிணைகளின் நிழலைவிட்டுப் பிரியத்தரியாத தம்பேரன்பேகாரணமாகப் பகைப்பதற்கு ஜயவிஜயர் உடன்பட்டார். இப்படிப் பக்தியின் பெருமையைப் பகையினது வேகத்தால் அளந்துகாட்டுகின்ற அருமை மிகவுடையது இந்தச் சிறுகதை. ஆதலின் கடவுளைச் சிலர் பகைத்து வெறுப்பதும் மறப்பதும் செய்கின்றார்கள் எனினும் அதுவும் அக்கடவுளின் அருளினுலேயே ஆகியதென மதித்தாலும் புதுமையில்லையே.

கண்டாகர்ணனுடைய சரித்திரமும் இச்சமயத்தில் கருதற்குரியது. சீரியசிவபக்தன் அவனுயதுடன்திருமாலிடத்தில் கரையிலாப் பகைபாராட்டினுன். அப்பெருமானின் ஆயிரம்நாமத்தில் ஒருநாமமும் தன்செவியில் கேட்கப்படாதென இருகாதுகளிலும் இருபெருமணிகளைக் கட்டிக்கொண்டு அவைகளின் ஓசையால் பிறர்பேசும் திருமாலின் பேரும்புகழும் தன்காதினுள் கடக்கவொட்டாமல் தடுத்திருந்த காரணத்தால் இவனுக்கு இப்பெயர்வழங்கலாயிற்று. சிவபிரானை இவன் பரவிச் செய்த பூசனைகளுக்கோ அளவில்லை. எனினும் அவன்வாழ்நாள் முடிந்ததும் அவனது ஆவியைக் கைலாயநாதர்பால் கொண்டேகச் சிவகணங்கள் வருதலின்றியே வைகுண்டத்தினின்று நித்தியசூரிகள் விரைவுடன் எய்தி, "நண்ப, எங்களில் ஒருவனுய் இன்றே வைகுந்தம் வந்துசேர்ந்து திருமாலுக்குகந்த பெருமையன் ஆகுதி" எனப் பரிவுடன் அழைத்தனர். அவ்வண்ணம் அழைப்பவர்களை வெறுப்புடன் தன்னைக் கைவிட்ட சிவனையும் சினந்து அவன்பால் ஏகி இன்னதற்குக் காரணந்தான் யாதோ என வினவ, அக்காலம் மெய்விளங்க வருமக் குருநிலத்தினிடை இருந்த [illegible]ண்ணனைக்கேட்டு உண்மை தெரிந்துகொள்ளுமாறு சிவ[illegible]ன் அக் கண்டாகர்ணனை விடுத்தனர்.

கண்ணனருகு எய்தினன் கண்டாகர்ணன். எய்தி "ஏமானமில்லா மாயோய், உன்னை ஓயாது பகைத்திருந்தேன் யான். ஆயினும் உன்னை யுகந்தவன்போல் என்னெடும் உறவு கூறுகின்றுய் ஒரு நீ. மானமொடு மதியும் இழந்தனைகொல்" என நிந்திக்குமளவில் அம்மாமாயன் மகிழ்வுற நகைசெய்து, "கண்டாகர்ணு, உமையொருபாகனை நீ உற்றபடி யெல்லாம் பூசித்தாய் உண்மையே. ஆயினும், என்னை முழுவதும் பகைத்து என் நாமும் கேட்கப்படாதென்று நீ கட்டியிருந்த மணிகள் இடைவிடாது அடிக்கஅடிக்க உன் சிந்தையில் இடைவிடாது நின்றது என் நாமமே. ஆதலின் நின்னளவு என்னை நினைத்திருந்தார் யாரே உளர். எனின் எவ்வகையினுலாதல் என்நோக்கத்தினுலாதல் என்நினைவு நிலைத்தமனத்தினர் யாவரேயாயினும் அவரைநாம் உகக்கின்றோம், அறிதியோ" எனப் பகர்ந்தனர்.

ஜெயவிஜயரோடு நம்பேதை கண்டாகர்ணனும் கலந்து நமக்கு அறிவுறுத்தி நிற்கின்ற தத்துவத்தைச் சிறிது பின்னர்க் கருதுவோம்.

ஆண்டாள்

2. கல்வியும் கவித்திறமையும்.

[748-வது பக்கத் தொடர்ச்சி]

3. கோதையார் கவி

ஆண்டாள், * ஆசு கவியா, † சித்திர கவியா, ‡ மதுர கவியா, $ விஸ்தாரகவியா, என்னும் சங்கையெழுவதுசகஜமே. இவ்வம்மையார் சித்திரகவியென்றெடுத்துக்காட்டும் ஆராய்ச்சியொன்று மிதுகாறும் யாரும் செய்திலர். ஆதலால் நமது சிற்றறிவுக் கெட்டியவரையில் இவருடையபதிகங்களை, சக்கரம், ரதம், பதுமம், நாகம் முதலிய சித்திரங்களி லடக்கிக் காட்ட இயலவில்லையாதலால், இவர் சித்திரகவி யன்றென்றே கொள்ளல்வேண்டும். ஆயினும் பொருளணி சொல்லணி யென்னும் இருவகையணிகட்கும் ஆண்டாள்திருப்பதிகங்களில் உதாரணங்கள் உள. இலேசம்* வேற்றுமை †, விபாவனை ‡, நுட்பம் $முதலிய அலங்காரங்கள் அளவற்றன ஆண்டாள் செய்யுட்களிற் காணலாம். மடக்குகளுக்கு உதாரணம் சில பத்தாம் திருமொழியிற் காணலாம். மடக்கப்படவேண்டுமென்று எண்ணுமலே மொழிந்தனவாக அவை காணப்படுகின்றமையால், இது ஆசுகவிக்கு ஓர் அத்தாட்சியுமாகும்:—

---

* எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிவையின்
விழுத்தக வொருவன் விளம்பிய உள்ளுறை
யப்பொழு துரைப்பது ஆசு கவியே.

இலக்கண விளக்கம் 764.

† கோமூத் திரியே கூட சதுக்கம்
மாலை மாற்றே எழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினுவுத் தரமே
காதைக் கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளம் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமும் அவற்றின் பால.

தண்டியலங்காரம் 95.

‡ சொல்லும் பொருளும் சுவைபட நிறீஇச்
செல்வுழித் தொடையும் விகற்பமும் செறீஇ
யுள்ளத் துள்ளே கொள்ளு மழகெனத்
தன்மை யுவமை பின்வரு பெற்றியி
னுருவக முதலுற் றோசை பொலியப்
பாடுதல் மதுர கவியெனப் படுமே.

இலக்கண விளக்கம் 765.

$ வித்தார கவியை விளம்புங் காலை
யுத்திறந் தொடர்நிலை யடிபல நடக்குந்
தனிப்பா வென்னத் தானிரண் டாகும். ஷை. 767.

அவற்றுள்
தொடர்நிலை விகற்பங் கடையில வென்ப. ஷை 768.

விரித்தபா மகட்கும் வேட்கும் இறைக்கும்
பொருத்தம் ஈரைந்தும் போற்றல் வேண்டும்.

ஷை 769.

* குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாட லிலேச மாகும்.

இலக்கணவிளக்கம் 661.

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலு
மவையு மன்னவென் றறைநரு முளரே.

ஷை 662.

பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று
எல்லாவுலகும் அளந்துகொண்ட வெம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான்
இல்லாதோம்கைப்பொருளும் எய்துவானொத்துளனே

11-வது திருமொழி (தாமுகக்கும்) 5.

† கூற்றினுங் குறிப்பினும் ஒப்புடை யிருபொருள்
வேற்றுமைப் படவுரின் வேற்றுமை யதுவே
குணம்பொருள் சாதி தொழிலொடு புணரும்.

இலக்கணவிளக்கம் - 652.

மச்சணி மாட மதிளரங்கர் வாமனனூர்
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி என்னுடைய பெய்வளைமேல்
இச்சை யுடையரேல் இத்தெருவு போதாரே.

11-வது திருமொழி - 4.

‡ உலகறி காரண மொழிந்தொன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

இலக்கணவிளக்கம் 653.

கோவை மணுட்டி நீயுன் கொழுங்கனி கொண்டெம்மை
ஆவி தொலைவியேல் வாயழகர் தம்மை யஞ்சுதும்
பாவியேன்றேன்றிப் பாம்பணையார்க் குத்தம்பாம்புபோல்
நாவு மிரண்டுள வாய்த்து நாணிலி யேனுக்கே.

10-வது திருமொழி (கார்க்கோடல் பூக்காள்) 3.

$ தெரிபுவேறு நிலவாது குறிப்பினும் தொழிலினும்
அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.

இலக்கணவிளக்கம் - 660.

தாமுகக்கும் தங்கையில் சங்கமே போலாவோ
யாமுகக்கு மெங்கையில் சங்கமு மேந்திழையீர்
தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்
ஆமுகத்தை நோக்காரால் அம்மானே அம்மானே.

(11-வது திருமொழி)

ஆண்டாள் ஆசுகவியென்பதற்கு முக்கிய அத்தாட்சி யாதெனில் அவர் பேசுவதுபோல் பாடுவது:—

நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்கா ளும்மை
நடமாட்டம் காணப்பாவியேன் நானோர் முதலிலேன்
குடமாடுகூத்தன் கோவிந்தன்கோமிறை செய்தெம்மை [போதுமே
உடைமாடு கொண்டானுங் களுக்கினியொன்று

10-வது திருமொழி (கார்க்கோடல் பூக்காள்)-7

இவ்வாறு யாதொரு சிரமும்இன்றி வார்த்தையாடுவதுபோல் பாடியும் இவர் பாடலில் அமைந்த எழுத்துக்கள் பெரும்பாலும் அமுதஎழுத்தா யிருப்பதைக் காண்க. அமுத எழுத்துக்களாவன* உயிரெழுத்துக்களில் அகர இகர உகர எகர வெழுத்துக்களும், மெய்யில் க ச த ப ந ம வ என்பனவு மாம். இவ்வெழுத்துக்களே மங்கலமொழிகளுக் குரியன. இந்நான்குயிர்கள் ஏறப்பெறும் ஏழுமெய்களும் இருபத்தெட்டு உயிர்மெய்யெழுத்துக்களைத்தரும். அவை மிகவும் புனிதமானவை. இந் நான்கு உயிர்எழுத்துக்கள் வேறு மெய்யெழுத்துக்களின்மேல் ஏறிவரினும் மேற்கண்ட ஏழு மெய்யெழுத்துக்கள் வேறு உயிர்களோடு கூடி வரப்பெறினும் அவ்வுயிர்மெய்யெழுத்துக்களும் உத்தம வெழுத்துக்களெனவே கொள்ளல்வேண்டும். எனவே, இந்த $(8\times7+4\times11 = 56+44)$ நூறு உயிர் மெய்யும், முற்கூறிய இருபத்தெட்டு உயிர்மெய்யும், நான்குயிரும், ஏழு மெய்யுமாகத் தமிழில் மங்களகரமான எழுத்துக்கள் 139 ஆகும். ஏனையவெழுத்துக்கள் நச்செழுத்துக்களேயாம்†. அவை நீங்கி நின்ற இவ்வெழுத்துக்களின் சேர்க்கையால் இனிய நாதம் உண்டாகின்றது. இராக ஆலாபனை யின்றியே ஓசை தாங்குவதைக் காண்க.

கோதையார் ஆசுகவியாய்ப் பாடிய பதிகங்களிற் சொல்நயம் மிகுந்திருப்பது அடியிற்காட்டும் செய்யுளால் நன்கு விளங்கும்—

பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்
செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையா லிடர்தீர்வா ராகாதே.

11-ம் திருமொழி 3.

இப்பதிகத்திலுள்ளசொற்கள் விழுமியபொருள்தம்மிடத்தே தோன்றும்படி நிற்றலுமன்றி, வேறு பல

* கசதப நமவ வேழொடு மகர
மிகர முகர மெகர நான்கு
மமுத வெழுத்தென் றறைந்தனர் புலவர்.

இலக்கணவிளக்கம் 779.

† யரலள வென்னும் எழுத்தினை யூர்ந்த
வாவு மோவு மந்நாற் புள்ளியு
மாய்தமு மஃகான் குறுக்கமு மளபு
மெய்தா நஞ்சென் றிகழ்ந்தனர் புலவர். ௸ 780.

[குறிப்பு:—மேற்கண்ட சூத்திரத்தில் கூறிய எழுத்துக்கள் மிகவும் அதமமெனக் கொள்ளப்படினும், இவ்விரண்டு வகையின்பாற் படாதனவும் மத்திமமாகையால், நல்லசெய்யுளுக்கு மங்கலமமையாமையின், அவைகளையும் நச்செனவே நீக்குவர் மேலோர்.]

பொருளினைத் தழுவலுங் காண்க. ஒவ்வொருசொல்லும் இலக்கணஆராய்ச்சியின்கண் *மங்கலமாக விளங்குவதையுங் காண்க †. இத்தகைய சொற்பொருத்தம் விஸ்தார கவிக்கு இன்றியமையாத லட்சணமாம் $.

திருப்பாவையில் இவர் 4-ம்செய்யுளிற்பாடிய இலக்கணமே ஆசுகவி இலக்கணமெனினும் *பொருந்தும். கேசவனைப் பாடுதலும், பாடியபின்னர்ப் பறைகொள்ளலும், இவ்வாறு தான் "மனத்துக்கினியானைப்" பாடவும்" †மற்றோர் "வல்லானை(யைக்)கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனை"ப் பாடா திருப்பதும் இவ்வம்மையார் உளந்துடிக்கும்படி செய்யும். கோதையாரோ காளமேகமாய்க் கவிமழை பொழிவார். ஆயினும் மற்றுலகத்தவரோ கள்ளம் தவிர்த்துக் கலத்தல் அவர் காலத்திலும் ‡கடினமாகவே இருந்ததெனத் தெரிகிறது. இதுவே 5-ம் செய்யுளின் முறையீடு நிமித்தமாகும்:—

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினிற் றோன்று மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் றூசாகும் சேப்பேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை. 5.

* சீர்பொன் பூமணி திங்கள் பரிதி
கார்திரு வெழுத்துக் கங்கை யானை
கடனிலை மாவுல கஞ்சொன் னீர்தே
ரமுதம் புகழ்நில மாரணங் கடவுள்
திகிரி பிறவுஞ் செப்பு மங்கலமே.

இலக்கணவிளக்கம் 771.

† விழுப்பொருள் தோன்றல் வேறுபல் பொருளி
னொழுக்கல் வகையுளி யுறுத வீறு
திரித லின்றிச் செய்வது சொல்லே. ௸ 772.

‡மதத்திற் பொலியும் வடசொற்கிடப்புந் தமிழ்மரபு[வினைப்
முதத்திற் பொலியேழை சொற்களின் குற்றமு மோங்கு
பதத்திற் சிதைவு மறிந்தே முடிக்க பன்னூறுயிரம்
விதத்திற் பொலியும் புகழவலோகிதன் மெய்த்தமிழே.

வீரசோழியம் - கிரியாபதப் படலம் 13.

$ கூறிய விலக்கணங் குறைபா டின்றித்
தேறிய மூவகைச் சீர்முத லாக
அகல கவிதா னமையு மென்ப.

இலக்கணவிளக்கம் 804.

* ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை. 4.

† திருப்பாவை - 15. வரி - 7 - 8.

‡ சினத்தினாற் றென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில் லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்-

திருப்பாவை - 12, வரி 5 - 8.

குறிப்பு - இதில் உறக்கத்தை யுருவகப் படுத்தியிருக்கின்றார்.

கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[735-வது பக்கத் தொடர்ச்சி]

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் சங்கநூற் கருத்துக்களைத் தமது நூலிற் பெய்திருத்தலோடு, அந்நூற்களிலுள்ள மொழிகளையும் உள்ளதுள்ளவாறே பொருட்டிட்பத்துடன் எடுத்தாண்டுள்ளார் என்றற்கெடுத்துக்காட்டாகச் சிலவற்றை யீண்டெடுத்தெழுதத் தொடங்குவாம்.

கட்டு வரிவிற் கருங்குறவர் கைத்தொழிலால்
இட்ட இதணத் திருந்தெம் பெருமாட்டி
தட்டை குளிர்தழலைத் தாங்கித் தினைப்புனத்தைக்
கிட்டலுறு வண்ணங் கிளிமுதற்புள் ளோட்டினளே.

வள்ளியம்மை திருமணப்படலம்.

[கட்டுப்பொருந்திய அழகிய வில்லையேந்திய கருநிறமுள்ள குறவர்கள் தமது கைத்தொழிலினால் உண்டாக்கிய பரணில் தங்கியிருந்து, எம்முடைய தலைவியாகிய வள்ளியம்மை (தினைப்புனத்து மேயவரும் கிளி முதலிய பறவைகளை யோட்டுங் கருவிகளாகிய) தட்டை, குளிர், தழல் என்பவற்றைக் கையிற்கொண்டு (அவற்றால்) தினைக்கதிர் விளைந்த கொல்லையை யணுகவும் முடியாதபடி, கிளிமுதலிய பறவைகளை யோட்டினாள் என்பது இதன் பொழிப்புரை]

இதணென்பது பயிரையழிக்கவருகின்ற பல்வகைப் புட்களையும் விலங்குகளையுங் கண்டு ஒட்டும்படி உயரமாக அமைக்கப்பட்ட பரண்.

'தட்டையாவது, மூங்கிலைக் கண்ணுக்கண் உள்ளாகநறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி' என்றும், 'தழலாவது, கையாற் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும் ஓசையாற் கிளிமுதலியவற்றை யோட்டுங் கருவி' என்றும்; * குளிராவது, தட்டை தழல் என்ற இவைபோல்வதோர் கிளிக்கருவி' யென்றும், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினிய ருரைவகுத்தனர்.

இனி இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட 'தட்டை, குளிர், தழல்' என்ற சொற்கள் எந்நூலிலிருந்து எடுத்தாளப் பட்டன வென்பதை நோக்கலாம்.

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய 'குறிஞ்சிப்பாட்டு' என்பது 261 அடிகளையுடையது. தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்கு அறத்தொடுநிற்கும் பாங்கி கூற்றாக, ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது. இது மலைவளங்களையும் இல்லறமுறைமையையும் தலைவனுந் தலைவியும் தம்முள் வைக்கத்தகும் அன்புடைமையையும், கற்பின் இன்றியமையாமையையும் கூறும் இதில், பல மலர்விசேடங்கள் கூறப்பட்டுள. இது பெருங்குறிஞ்சி யென்றும் வழங்கப்படும். இந்நூலுள்,

கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவணா
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையும் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி

என்ற அடிகளில் முற்குறித்த சொற்களைக் காண்க [ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே (இராக்காலம்) ஆகாயத்திருப்போன் பண்ணின புலி யஞ்சுதற்குக் காரணமான அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துப் பிரம்பாலே அழகுபெறத் தெற்றின (தெற்றின-பின்னின) இதணத்தேயேறி, தழலும் தட்டையும் குளிரும், பிறவுமாகிய கிளியோட்டு முறைமையினையுடையவற்றை முறைமுறையே கையிலேவாங்கியோட்டி' என்பது நச்சினார்க்கினியரது பதவுரையையொட்டிய பொழிப்புரை]

† மற்றும், இம்மொழிகள், 'வெதிர்புனை தட்டையேன்' (நற்றிணை 147) 'தழலுந் தட்டையு முறியுந் தந்து,' 'படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே' (குறுந்தொகை 233, 291 கலாநிலயம் 1930 ஆண்டின் தொகுதியிற் காண்க.) 'தழலைவாங்கியுந் தட்டையோச்சியும்' (அகநானூறு 188), என்றசங்கநூல்களில் வந்துள்ளவற்றைக்காண்க. (குளிரும், குளிரியும் ஒக்குமெனக் கூறி இவற்றை மேற்கோள் காட்டுவர் சொக்கப்ப நாவலர் (தஞ்சைவாணன்கோவை 73 உரை.)

சூரல் பம்பிய தணிகைமால் வரைதனில் சுடர்வேல்
வீரன் வீற்றிருந் திடுதலும் வேலையங் கதனில்
வாரியும் வடித்துந் தியும்வரி சையாலு றழ்ந்துஞ்
சீரியாழ் வல்ல நாரதன் புவிதனிற் சேர்ந்தான்.

என்பது, வள்ளியம்மை திருமணப் படலத்தின்கண் வருகின்ற பாசுரமாகும்.

[பரப்பங்கொடி நிரம்பிய திருத்தணிகைமலையில் ஒளிபொருந்திய வேற்படையையுடைய வீரனாகிய முருகக்கடவுள் வேறொருவர்க்கில்லாத பெருஞ் சிறப்போடு தங்கியிருந்த அளவிலே, அந்தவேளையில் (நரம்புகளைக்) கூடத்தழுவியும், உருவித்தெறித்தும், (முறைப்படி ஒரு நரம்பைவிட்டு ஒன்றைத் தழுவியும், சிறப்புப்பொருந்திய (தனது) மகதியென்னும் வீணையை வாசிப்பதில் வல்லமைபெற்ற நாரதமுனிவன் பூமியில் வந்தான், என்பது இதன் பொழிப்புரையாம்.]

இச்செய்யுளிலுள்ள 'வாரியும், வடித்தும், உந்தியும், உறழ்ந்தும்' என்ற அரிய இசைக்குரிய செய்கைச்சொற்களின்னவிடத்திருந் தெடுத்தமைக்கப்பட்டனவென்பதை யாய்ந்தெழுதுவாம்.

பொருநாற்றுப்படை யென்பது சங்கநூற் பத்துப்பாட்டினு ளொன்றாகும். இது 248 அடிகளையுடையது. பரிசில்பெறக் கருதிய ஒருபொருநனைப் பரிசில்பெற்றா னொருவன் இளஞ்சேட் சென்னி புதல்வனாகிய சோழன்கரிகாற் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அக் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. (பொருநர் - ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலர். அவருள் இப்பொருநன் - போர்க்களம் பாடுவோன்.) இது கரிகாற்பெருவளவன் கொடையையும் அவன் வீரத்தையும், அவனுண்ட சோழநாட்டின் வளத்தையும், காவிரிநதி பயன்படுதலையும் நன்

* குளிர் தினைப்புனத்திற் கிளியோப்புவோர் மூங்கிலை வீணைபோற் கட்டித்தெறிக்குங் கருவியென்பார் (மகாமகோபாத்தியாய தக்ஷிணாத்யகலாநிதி, பிரஹ்மஸ்ரீ வே. சாமிநாத ஐயரவர்கள் உரை.)

† இங்குக் குறித்துள்ள மேற்கோள்களைச் சங்கப் புலவர் சரபமாகிய பிரம்மஸ்ரீ வே. சாமிநாத ஐயரவர்களது, பத்துப்பாட்டு உரைப்புத்தகத்திற் காண்க.

ருகக் கூறும். இந்நூலில் இசைக்கருவியாகிய யாழின் அமைப்பை வெகு அழகாகப் புலவர் கூறியுள்ளார்.

மாயோள் முன்கை யாய்தொடி கடுக்குங்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னுய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படையிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்'

என்ற அடிகளும், அவற்றினுரையும் ஈண்டைக்குப் பெரிது மின்பம் பயப்பனவாம்.

[கரியநிறத்தையுடையோருடைய முன்கையில் அழகினையுடைய நேர்ந்ததொடியினை யொக்கும் வார்க்கட்டினையும், ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடைத்தாகிய திண்பிணிப்பினையுடைய வலிக்கட்டினையும், அழகினையுடைய தினையரிசியிற் குத்தலரிசியை யொத்த குற்றம்போகிய விரலாலசைக்கும் நரம்பினையுடைய இசை முற்றுப்பெற்ற நீண்ட விசித்தலையுடைய தொடர்ச்சியினையும் கலியாணம் செய்தமை தோற்றுகின்ற மாதரை யொப்பித்தாலொத்த அழகினையுமுடைய யாழிற்குரிய தெய்வம் (மாதங்கி) தன்னிடத்தேநின்ற அழகினையுடைய வழியை யலைக்கின்ற கள்வர்தம் கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி அருளினது மாறுகிய மறத்தினை, அவரிடத்தினின்று பெயர்க்கும் மருவுதலினிய பாலையாழை(பாலை ஆகுபெயர்) நரம்புகளைக் கூடத்தழுவியும், உருவியும் தெறித்தும், ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும்' (வடித்தல் நரம்பெறிதலென்று முரைப்பர்) என்பது நச்சினார்க்கினியருரை.] இவ்வாறே,

வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ள
லேருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
எட்டு வகையி னிசைக் கரணத்து'

எனச் சிலப்பதிகாரத்தில் இவ் யாழ்ச்செய்கையி னிலக்கணங்க ணிரம்ப வினிதாகக் கூறப்பட்டிருத்தலையுங் காணலாம்.

இனி, இவ்வடிகட்கு உரையாசிரியச் சரபமாகிய அடியார்க்கு நல்லாரது விரிவுரையைப் புலவர் திலகராகிய ஸ்ரீமத் வே. சாமிநாத ஐயரவர்கள் வெளியிட்டவாறே அடியிற் குறிக்கின்றோம்.

"வார்தலென்றது சுட்டுவிரற் செய்தொழில்; வடித்தலென்றது சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமு மாராய்தல்; உந்தலென்றது நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும், மெலிவிற்பட்டதும், நிரல்பட்டதும், நிரலிழிபட்டதும், என்றறிதல்; உறழ்தலென்றது ஒன்றிடையிட்டும், இரண்டிடையிட்டும் ஆராய்தல்; உருட்டலென்றது இடக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல்தானே யுருட்டலும், சுட்டொடு பெருவிரற் கூட்டியுருட்டலும், இரு பெருவிரலும் இயைந்துடனுருட்டலும் என வரும்;

தெருட்ட லென்றது செப்புங் காலை
யுருட்டி வருவ தொன்றே மற்ற
வொன்றன் பாட்டு மடையொன்ற நோக்கின்
வல்லோ ராய்ந்த நூலே யாயினும்
வல்லோர் பயிற்றும் கட்டுரை யாயினும்
பாட்டொழிந் துலகினி லொழிந்த செய்கையும்
வேட்டது கொண்டு விதியுற நாடி.

என வரும்......இவை இசைத்தமிழ்ப் பதினறு படலத்துட் கரணவோத்துட் காண்க.

ஆய்தினை யவைய லனையவா நரம்பாங்
கணிபெற வாரியும் வடித்தும்
ஏயுற முறையே யுந்தியு முறழ்ந்து
மியைந்தநீ ரோடுநன் மொழிக
டேய்வற வெடுத்துச் சிதறியும் பலகாற்
றேனுறழ் இன்னிசை யெழுப்பி'

என, இலிங்கபுராணத்தும் இச்சொற்கள் இவ்வாறு கூறப்பட்டிருத்தல் காணத்தக்கதாம்.

சிஷ்டாசாரமும் அதன் அம்சங்களும்

(புரோபஸர் இராதாகிருஷ்ணன் சொற்பொழி வோன்றின் மொழிபெயர்ப்பு)

"அக்ராஸநர் ஜயபுரி ஸமஸ்தாந அதிபதியவர்களும், இக்கலாசாலைத் தலைமையாசிரியரவர்களும், ஏதோ பெரிய காரியங்கள் நான் புரிந்துவிட்டேனெனமதித்துப் பாராட்டிய புகழுரைகளுக்காகவும் இவ்வரவேற்பு உபசாரத்தின்கண் அடங்கியுள்ள அன்பார்ந்த மொழிகளுக்காகவும் நான் என் மனமுவந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஐரோப்பிய யாத்திரையை நான் அதிகம் உவந்தேனாயினும் பாரதபூமிக்குத் திரும்பி இவ் ஆந்த்ரநாட்டுத் தலைநகர் வந்து அடைந்ததைக்குறித்து நான் இன்றைய தினம் பெரிதும் அகமகிழ்கின்றேன். இருபது ஆண்டுகளாகப் போதகாசிரியனாயிருந்தும் இக்காலமெல்லாம் நானும் மாணாக்கர்களுக்குள் ஒரு மாணாக்கனெனவே நினைத்து நடந்து வருகிறேன். நான் இக்கழக உப அத்யக்ஷர் ஸ்தாநத்துக்கு அபேக்ஷகனாய் நிற்க உத்தேசித்தபோது, இந்த ஸர்வகலாசாலை வகுக்கும் நிர்வாஹ ஒழுங்குகளும் சட்டங்களும் விதிகளும் தினசரிக் குறிப்புகளும் நிர்ணயங்களும் சேர்ந்து, இருபாலரும் சாசுவதமான கல்வியைக் கற்று, உயரிய நோக்கம் உண்மை அன்பு, உதாரகுணம் முதலியன பொருந்திய சிஷ்டர்களாக விளங்குவதற்குரிய உபகரணங்களோ ஒருபோதும் ஆகமாட்டா என்னும் உண்மையை எனக்குப் பலர் வற்புறுத்தினர். இப்போது நான் இந்த உப அத்யக்ஷர் பதவியை வஹித்திருப்பினும், உயரிய பீடத்தில் அமர்ந்து நிர்வாஹ அதிகாரம் மட்டுமே வேகமாகச் செலுத்தி அன்றன்று காரியங்களை மாத்திரம் நடத்திக்கொண்டிருக்கும் நோக்கமுடையவனல்லேன்; இப்பரிஷத்தினில் நிர்வாஹ இயக்கத்தைக்காட்டிலும் போதனா முறையையே முக்கியமெனக் கருதி அதனையே அதிகமாய்க் கைக்

கொண்டு உழைக்கும் எண்ணங் கொண்டிருக்கிறேன். பிரதமாசிரியரும் கனம் தங்கிய அக்ராஸநரும் என்னை யாக்யவல்க்யருடனும் அவர் போன்றவர்களுடனும் ஒப்பிட்டுக் கூறினர். அவர்கள் அவ்வாறு மொழிந்தது அவர்களுடைய ஊக்கம் அவர்கள் கொண்டிருக்கும் ஆர்வம் அனைய காரணங்களினாலன்றி விஷயங்களை உள்ளவாறு உணர்ந்தமையால் அன்றென நான் திண்ணமாய்ச் சொல்வேன். சிற்சில சமயங்களில் நாம் மிகைபடக்கூறல் என்னும் குற்றத்துக்கு எளிதில் ஆளாய் விடுகின்றோம். எவ்வாறாயினும் நீங்கள் இவ்விதம்கூறிய தன் உட்கருத்தை உணர்ந்து நான் பெரிதும் உள்ளம் பூரிக்கின்றேன். நான் செய்துள்ள வேலைக்கும் உங்களுடைய புகழுரைக்கும் எவ்வகைத் தொடர்புமில்லையென நான் நிச்சயமாய் நினைக்கிறேன். நீங்கள் இன்று கூறிய உபசாரமொழிகளுக்குக் காரணம், என்னிடம் நீங்கள் பாராட்டும் பிரேமையும் உத்ஸாஹமும் அன்புமே யென நான் தெளிந்து அம்மொழிகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

சிஷ்டாசாரம் - அதன் அம்சங்கள்.

ஆந்திர ஸர்வ கலாசாலையின் நோக்கம் யாது, அதற்கு அவசியமாய் வேண்டப்படுவது யாது? எந்த இலக்ஷியத்தினை அல்லது நோக்கத்தினை இந்தக் கலாசாலை பெரிதும் வற்புறுத்தப்போகின்றது? ஆண்மக்களும் பெண்மக்களும் வித்தைகள் பலவற்றில் தேர்ச்சியுடையவர்களாவதும் ஞானவிஞ்ஞானக் கலைகளைக் கற்பதும் தொழில் வல்லுநர்களாவதும் மட்டுமேயன்றி அவர்கள் உயரியலக்ஷியம் உண்மைக்கொள்கைகள், உள்ளன்பு, உதாரகுணம், விசாலபுத்தி இவையனைய குணங்கள் அமையப்பெற்ற சிஷ்டர்களாக விளங்க வேண்டு மென்பதே இக்காலம் நாம் கொள்ளவேண்டும்கோரிக்கையாகும். கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் நாம் கற்பனவற்றில் பெரும்பாகம் மறந்துபோன பின்னரும், நீடித்த காலம்வரை நிலைபெற்று நிற்பதாய்ப் புத்திவிசால ஸம்பந்தமானதும், நாநாவித தரும சிந்தனைகளைப் பெருக்குவதும் குணச்சிரேஷ்டமானதும் நம்மைவிட்டு மறவாது மறையாது அகலாது நம்மையொட்டி நம்மைப்பற்றி நிற்கும் சாசுவத அம்சங்களே சரியான சிஷ்டாசாரம் அல்லது கல்சர் என்று சொல்லத் தகுந்தவையென நான் பலகாலும் நினைத்துள்ளேன்.

சிஷ்டன் எனப்படுவோன் (A man of true culture) தத்துவவிசாரணைப் பயிற்சியடைந்து அதனால் ஏற்படக்கூடிய மனோபாவமுடையோனாகி நிறைந்த விசாலபுத்தி அமையைப்பெற்று நிற்பவனாவான்; எப்போதும் மற்றவர்களுடன் மாறுபாடின்றி ஒத்துழைக்கும் மனநிலையுடையவனாகி விளங்குவான்.

தற்போது பூர்வாசாரமெனப் (போலிப் பெயர் கொண்டு) பல்வேறு மனோவிகாரங்களும் குணவிகாரங்களும் வெளிவிகாரங்களும் நின்று நமது அபிவிருத்தியைத் தடைப்படுத்துகின்றன. மேலே படிந்திருக்கும் இம்மாசுகளை எவ்விதம் நமது கல்வியைக்கொண்டு நாம் அகற்றலாம்? இவ் ஆலயம், இந்த ஸர்வகலா ஆலயம் உண்மையான சீலகுணத்தினையும் சிஷ்டஆசாரத்தினையும் நாடோறும் பெருக்கிவைக்குமோர் புநித ஆலயமாக இருத்தல் வேண்டும். நாலுபக்கமும் எல்லையிட்டுக் கட்டப்பட்ட வீடுகளில் எழுப்பி வைத்திருக்கும் வானமளாவிய உயரம்மிகு சுவர்களால் சூழப்படாததாயும் சிலருக்கு அகலத் திறந்துநின்று வேறு சிலருக்கு இரட்டைத் தாழ்ப்பாளிட்டு மூடும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் 'வாயிலென்னப் பூட்டென்ன மதிலென்ன வழங்கும் மரபொன்றுமின்றியே'' இப்பூவுலகினில் மனிதர்களால் ஆக்கப்பட்ட சிருஷ்டிகளுள் அதி மேன்மையானதைவிட ஒரு படி விஞ்சியே விளங்கக்கூடிய இணையில்லாத் தூய்மைவாய்ந்த நூதன சிருஷ்டியாய்ப் பெரியதொரு கலங்கரை விளக்கென இச்சர்வகலாசாலை ஒளிவீசி நிற்றல்வேண்டும்.

இமயமலையன்ன இப்பெரும் மாளிகை, உத்தமமான மெய்ம்முறை அன்பினையே ஆதாரமாகக் கொண்டு, கண்களுக்குப் புலப்படாவிடினும் காரியங்களில் பளிங்குபோல் காண்கிற பரஸ்பரநட்பினையும் ஸஹோதரப் பான்மையையும் விருத்தியாக்கிப் பலப்படுத்தவேண்டும். உலகமக்களில் ஒருவனேனும் விடுதலையடையாது சிறையி லடைபட்டிருக்கும்வரையில் நான் விடுதலையடைந்தவனாக மாட்டேன். இந்த அகில கலாமண்டபத்தில் வழங்கப்படும் கல்வியானது இவ்வித மனோபாவத்தினையும் இத்தகைய நோக்கங்களையும் சிறுவர் சிறுமிபர்கள் மற்றும் இவ்விடம் குழுமியுள்ளோர் அனைவர் மனத்திலும் ஆழ ஊன்றச்செய்து, இக்கருத்துக்களை அவர்களுடைய இயற்கைக் குணங்களாகும்படி செய்வித்தல்வேண்டும். அபிப்பிராய பேதங்கள் எத்தனையிருப்பினும், எவ்வளவு எதிர்வழக்கு உண்டாயினும் எத்துணை முரண்பாடு உற்றனவாயினும் ஸஹோதர சிந்தனை மறவாது மனிதர்கள் நண்பர்களென மகிழ்ந்த மனத்தினோடும் கைகோத்து உலவுதல் வேண்டும். மனிதவர்க்கமென்பது உடைந்த பானை ஓடு என்றாவது அல்லது கைகால் முளைத்த தட்டுமுட்டுக்களெனவாவது கருதப்படுவது ஒழிதல் வேண்டும். ஆதிகாலந் தொட்டு எப்போது பார்த்தாலும் அன்பே இந்த ஜகத்தின் அரிய இரகசியமாய் விளங்கி வருகின்றது. போலிச் சகோதரன் நமது குற்றங்களைக்கண்டு ஏசுகின்றான், கடிகின்றான்; ஆனால் பூததயைமுதலிய அரும்பெருங் குணங்கள் அமையப்பெற்ற விசாலபுத்தியுடையதருமகுணமானது பிறருடைய குற்றத்தைக்காண மனம் விண்டு நெடிதுயிர்க்கின்றது. இக்கழகத்தினில் விஞ்ஞாநம், கைத்தொழில், இயந்திரத்தொழில், வைத்தியம், சிற்பசாஸ்திரம்போன்ற பல்வேறு சாத்திரங்கள் கற்பிக்கப்படும். ஆயினும், சகலவிதமான சிஷ்டாசாரங்களுக்கும், உயரிய இலக்ஷியங்களுக்கும், உத்தம குணங்களுக்கும் அடிப்படையான அன்பெனும் இவ்வரிய ஆன்மநிலையை, இம்மஹா மந்திரத்தை, மனதில் கொண்டு பாடுபட்டாலொழிய நமது வாழ்நாட்களின் பயனை நாம் அடைந்தவர்களாகமாட்டோம். நமது பிறவி கைகூடிய தாகாது.

நமது நாடு தற்போது அதிக இடுக்கண் உடைய நிலையிலிருக்கிறது, அன்றன்று பொழுதைக் கழிக்கும் வகையின்றித் தளர்கின்றார் மாந்தர் எண்ணிறந்தோர். எனினும் பார்க்குமிடத்து உலகத்தில் எத்தேசம் இவ்வித கஷ்டகாலத்தைக் காணாதிருந்தது. ஐரோப்பா கண்டத்தினில் ஒரு சிறியதேசம், இச் சென்னை இராஜதானியைவிடச் சிறியதொரு தீவு. அந்த இங்கிலாந்து பலநூற்றாண்டுகளாகப் பல்வேறு இடையூறுகளுக்கு இடமாகி அவைகளை அநுபவித்து அவற்றினிடைச் சோர்வடைந்து சலித்துவிடாமல் நாளொருமேனியும்

பொழுது ஒரு வண்ணமுமாய் முன்னடைந்து வருகின்றது. ஆனால் பாதக்கண்ட மெனப்படும் நமது இந்தியாவோ பூமியிற் பெரியதோர் பாகம். இத்தேசத்தில் பணநெருக்கம் தொழில் கஷ்டம் ராஜீயக் கலவரம் சமுகச்சீர்திருத்தம், சிஷ்டாசார (Cultural) நிர்ணயம் எனப் பலவித தொல்லைகள், ஒரே காலத்தில் ஏற்பட்டுப் பலவகையிலும் சோதனை செய்கின்றன.

ராஜீயத் துறையினில் ஜனஆட்சியெனவும் ஏனைய எல்லாத் துறைகளிலும் பல்வேறுவகைப் புத்துயிர்க் கிளர்ச்சிகளும் தோன்றி நாம் போராடிக்கொண்டிருக்கின்றோம். மஹா பெரிய குழப்பம் இதனை ஜயித்து நாம் மேல் செல்லவேண்டியிருக்கிறது? இந்தக் குழப்பத்திலிருந்து எவ்வாறு விடுதலை யடையப் போகின்றோம்?

உண்மையான இலக்ஷியங்களையும் நோக்கங்களையும் ஆய்ந்து தெளிந்து பின்பற்றாது 'காடும் மலையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன் பிறகே' நாம் யாதொரு தீர்ந்தபாதையும் வகுக்காமல் கண்மூடித்தனமாய்க் காலம் கழித்து அலைவுற்று இடர்ப்படப் போகின்றோமா? அல்லது தொண்டுசெய்வதெனும் தியாகத்தில் ஈடுபட்டுத் தெளிவான ஆலோசனைகள் செய்து, மெய்வருத்தம் பசி திரவியம் இவற்றைத் தியாகஞ்செய்து மனிதத்தொகுதியை நேரானவழியில் செலுத்தப்போகின்றோமா?

சிதம்பரதேவர் சரிதம்.

[751-வது பக்கத் தொடர்ச்சி]

12. விவாகம்.

இராஜ குமாரிகளிருவரும் மனந்தளராது இனிச் செய்வது யாது என்று பற்பலவாறு யோசித்துத் தாமிருந்த வைபவத்தையும் ஓரிரவில் தமக்கு நேர்ந்த விபத்தையும் எண்ணியெண்ணித் துக்கித்துப் பிறகு தைரியங்கொண்டுதங்களுயிரைக் காப்பாற்றியவேந்தர்கள் தங்கள்மீது கொண்டிருக்குங் காதலையும் உன்னி மகிழ்ந்து இப்படித் தேடிப்போன மருந்து காலிலகப்பட்டதுபோல் வாய்த்தும் அனுபவிக்கப் பிராப்தியில்லாமற் போம்படி நமது பிதா, நாமொன்று மறியாதிருக்க ஓர்குற்றம் சுமத்தினரே யென்று வாடிநொந்து கடவுளை நினைந்து வருந்தினர். தங்களை யெப்படியுங் காப்பாற்றத் துதித்துப் பிரார்த்தித்தனர். பிறகு தேறி, இனி இவர்களாலன்றித் தாம் கடைத்தேற மார்க்கமில்லை; இவர்களே தங்கள்மேற் சுமத்திய குற்றத்தை யொழிப்பவர்களென் றுறுதிகொண்டு அவர்களெதிரிற் சென்று தலைகுனிந்து வெட்கி நின்றனர். பரமார்த்தகேஸரி அவர்கள்மனோபாவமுணர்ந்து, "ஓ இராஜரத்தினங்களே, உங்களழகுக்கு இரதியும் நாணுவள், புஜபலத்திற்கு விஜயனு மஞ்சுவன். நீங்களிக் கானகத்தில் அனாதையரும் நிராயுதருமாய் இரண்டு மனிதர்கட்குட்பட்டு அவர்கள் சொற்களுக்கடங்கி நிற்கலாயிற்றே என்றொருபோது மெண்ணற்க. உங்கட்கு யாதொரு துன்பமும் வாராமற் காப்போம். நீங்கள் உங்கள் பிதா விருக்குமிடத்திற்கோ மனோகரமான உங்கள்நகரத்திற்கோ யேகத் துணைபுரிவோம். அங்குச் சென்று தாய்தந்தையரைக் கலந்து மறுமொழி உரைக்கலாம்" என்றனன். காந்திமதி, "ஓ, வீரசூர பராக்ரம இராஜகுமார உத்தமர்களே, நீங்கள் எங்கள் பிராணனை இரக்ஷித்ததற்காக நமஸ்கரிக்கின்றோம். எனினும் பிராணனிருப்பதில் பிரயோஜனமில்லை. நீங்களப்படி நடுங்காதீர்கள். நாங்கள் யாதொன்று மறியாமல் நேற்றிரவில் நித்திரைபோனோம். வரும் வழியில் நித்திரை நீங்கி எடுத்துவருவது உணர்ந்து வியப்புற்றுச் சேவகர்கள் வழியில் தாழ்ந்தகுரலில் பேசிக்கொண்ட வசனங்களால் எவ்விடத்திற்கோ எடுத்துப் போவதையுணர்ந்து தக்கசமயம் வாய்த்தால் யுத்தம் செய்து தப்பித்துக்கொள்ள நினைத்து அரவம் செய்யாதிருந்தோம். இங்கு வந்ததும் பல்லக்கிலிருந்து குதித்துச் சேவகத்தலைவனைக் காரணம் வினவ அவன் வருத்தத்துடன் நாங்கள் அரசனுக்கும் இராஜ்ஜியத்திற்கும் மானபங்க முண்டாம்படி அபசாரம் செய்துவிட்டோமென்றும் அதற்காகச் சிரச்சேதம்செய்ய உத்திரவளித்து எங்கள்தந்தை வேட்டைக்குச் சென்றாரென்றும் சொன்னான். இதைக்கேட்டுத் திகைத்து மெய்மறந்து நிற்கக் குண்டுபட்டு அவனிறந்தான். பிறகு நீங்கள் தரிசனந்தந்தீர்கள். இம்மட்டே யாங்களறிவது. நாங்கள் குற்றமுடையோராயினும், குற்றமற்ற வாழ்வே வாழ்வு. குற்றத்துடன் குபேரனானாலும் வாழ்வு ஈனவாழ்வாம். நீங்கள் உத்தம மண்டலாதிபதியின் குமாரர்களாகையால் உங்கள் குலத்திற்கும் வம்சத்திற்கும் நிகரான புண்ணியவதிகளை மணம்செய்வது உத்தமம். குற்றமுடைய எங்களைவிட்டகலுங்கள்" என்றுகூறிச் சேவகர்களது கத்திகளை யெடுத்துத் தற்கொலை புரிய முயன்றனர்.

இராஜகுமாரர்கள் காற்றாய்ப் பாய்ந்து கத்திகளையகற்றி "ஓ கன்னிகா சிரோன்மணிகளே, அஞ்சாதீர்கள்! தற்கொலைபுரிவது தருமமன்று. நீங்க ளெவ்விதமிருப்பினும் எங்களுக்குச்சம்மதமே. ஏனெனில் குற்றமிருப்பின் அது எங்களாற்றானுண்டாயிருக்கும். ஆதலால் நீங்க ளுயிர்மாய்க்கின் அதற்குக் காரணம் நாங்களாகின்றோம். ஆகையா லுங்களுயிர் நீங்கினால் நாங்கள் உயிர் வாழோம். அபசாரமோ வென்றும் உண்டாகவில்லை. அரசன் உத்திரவளிக்கவுமில்லை. நீங்கள் துயரப்படுவதும்சரியல்ல. தீரவிசாரியாமல் முடிவுசெய்யலாகாது" என்றுரைத்து அவர்களை அங்கு ஓரிடத் தமர்த்தி அவர்களிருவரும் அரசனைக் காணச் சென்றனர். இருண்ட ஓராரண்யத்துட் புகுந்து அரசனைத் தேடித் திரிகையில் அரசன் துரத்திவந்தபுலியின் இரைச்சலையும் பின்வந்த வேங்கையின் கர்ச்சனையும் குதிரையின் ஆரவாரத்தையுங் கேட்டுக் குறிப்பறிந்து செல்கையில் அரசனும் புலிகளுமெதிரிட அதிவேகமாய் அரசனுக்குதவிபுரிந்தனர். பின், அரசனிடமும் மந்திரியினிடமும் விடைபெற்று அரசகுமாரிகளிடஞ் சென்று அவர்களுக்குக் களிப்பூட்டி, "ஓ ரமணீமணிகளா, அரசனுக்கும் மந்திரிகட்கும் இங்கு நடந்தவையொன்றுந் தெரியாது. குற்றமு மேற்படுத்த வில்லை. அப்படியானால் எங்களுக்கு வாக்களியார். உங்களைப் புகழ்ந்தும்

பேசார். ஆகையால் ஏதோ சூது நடந்திருக்கின்றது. இரண்டொருநாளில் சேனையுடன் பட்டணம் சேருவார். அங்கு நடப்பதையுந் தெரிந்து எல்லாம் வெளியிடலாகும். இப்போதிங்கேயிருப்பதே உத்தமமெனத் தோன்றுகின்றது" என்றார். அவர்களு மதற்கிணங்கி வசித்தனர்.

வனத்தைவிட்டு அரசனும் மந்திரியும் பரிவாரங்களுடன் பட்டணத்தை நெருங்கிவருகையில் இராஜவீதிகளும் கடைத்தெருக்களும் மற்றவீதிகளும் அமங்கலமாகக் காணப்பட்டன. அரசனைச் சந்தோஷத்துடன் எதிரேற்கவேண்டிய பிரஜைகள் தெருமூலைகளில் கூட்டங்கூட்டமாய்க் கூடி முணுமுணுத்துக்கொண்டிருப்பதைக்கண்ட அரசன் மந்திரியை நோக்க "எல்லாம் இனியொரு கடிகையில் தெரியப்போகின்றதே, நாம் இவைகளைக்கவனியாது அரண்மனைசெல்வோம்" என்றனன். மஹாதேவர் எதிர்கொண்டு வணங்கி மந்திரியையடுத்து, "இராஜபுத்திரிகள் நமது அரசன் வேட்டைக்குப்போன மறுநாளிலேயே சில சோரபுருஷர்களுடன் போய்விட்டார்கள் என்று தாதிகள் சொல்ல எங்குந்தேடியும் அகப்படவில்லை. தாங்கள் வந்தால் யாவும் விளங்குமென்று எதிர்பார்த்திருக்கிறேன்" என்றார். விக்ரமசேனன் சிரித்து "இந்த அமங்கலச்சின்னங்களும் இனித் தேவரீர் விசனிக்கப்போகும் விஷயமும் மாளவ ராஜபுத்திரர்களால்நிவர்த்தியாகும்" என்று அரசனுக்குச் சொன்னான். அரசன் பிடிவாதமாய்க் கேட்க மஹாதேவர்கூற்றைத் தெரிவித்தனன். அரசன்சோகித்துமூர்ச்சையானான். அரசபத்தினிகள் உபசரிக்க மூர்ச்சை தெளிந்து புத்திரிகளை நினைத்து மனமுருகி மிக்க சோகத்திலாழ்ந்தான். அத்தருணம் இராஜகுமாரர்களிருவரும் தங்கள் வரவைத் தூதுவரால் தெரிவிக்க அரசன் தன் மந்திரியைக்கொண்டு அவர்களை வரவேற்கச்செய்து, "என் அருமைக் கண்மணிகளே! பிராண இரக்ஷகர்களே! நான் வாக்களித்து வீணன் ஆயினேன். என் அருமைக் குழந்தைகள் வேட்டைக்குப்போன மறுநாளே ஏதோ சூதினால் மறைந்துவிட்டார்கள். நான் ஒரு சக்ரவர்த்தியேயாயிருந்தும் இப்படிக் கலங்கலாயிற்று" எனப் புகன்றான். அதற்கு அக்குமரர் "காட்டில் வாக்களித்து நாட்டில் வந்து மறப்பதோ தங்கள் அரசநீதி" என, அரசன் வெகுண்டு, "என் வாக்கு வீணாகாதிருக்க என் அரசையே பெற்றுக்கொள்ளுங்கள்" என மறுமொழியுரைத்தான் பரமார்த்தகேசரி வணங்கி, "ஐயனே, தங்கள் தருமகுணத்திற்கு மெச்சினோம். தங்களருமைப் புதல்விகள் எங்கள் காவலில் சுகமாகவேயிருக்கிறார்கள். சோகத்தை விட்டு இனி நடக்கவேண்டியவைகளைக்கவனிக்கவேண்டுகிறேன். வேட்டைக்குச் சென்ற மறு இரவில் அவர்களை மருந்திட்டு மயக்கிச் சில சேவகர்கள் ஓர் வனத்திற்குக் கொலைசெய்யப் பல்லக்கி லெடுத்துச் செல்வதைக் கண்டு பின்தொடர்ந்து உதவிபுரிய அவர்கள் அச்சேவகர்களை வென்று ரக்ஷித்துக்கொண்டார்கள். இவ்விஷயங்களை வெளிப்படுத்த முயலுங்கள்" என்றான். சபையோர் யாவரும் வியப்புற்றுச் சந்தோஷக்கடலில் மூழ்கி இராஜபுத்திரர்களை ஆசீர்வதித்துப் புகழ்ந்து கொண்டாடினார்கள். விக்ரமசேனன் தன்னுண்ணறிவால் மருந்திட்ட தாதிகளையும் அவர்கட் குதவிசெய்த அரண்மனைக் காரியங்கள்பார்க்கும் விக்ரமகேதுவையும், கொலைசெய்யச் சேவகர்களை ஏவிய கோமளாங்கனையும் அரசசபைக்கழைத்துச் சென்றுவிசாரணைசெய்து இராஜனுத்திரவைஎதிர்பார்க்க, தாதிகளை மன்னித்து மற்றிருவர்களையும் காராக்ரகத்திலடைக்க அரச னாக்கினைசெய்தனன். பிறகு பரிவாரங்களுடன் வனஞ்சென்று குமாரத்திகளைக்கண்டு ஆனந்தித்து அழைத்துவந்து மாளவதேச அரசனை வரவழைத்து நல்ல சுபதினத்தில் அரசர்கள் சூழ பிரஜைகள் மகிழ அனைவரும் ஆசீர்வதிக்கத் தனதிரண்டு புதல்விகளையும் பரமார்த்தகேஸரி புஜங்ககேஸரி என்னு மிராஜபுத்திரர்கட்கு மணம்செய்வித்துக் குலசேகரப்பெருமாள் தன் தேவியர்களுடன் ஆனந்த மடைந்தான். பராக்ரமசேகரனைச் சேனாபதி ஸ்தானத்தினின் அகற்றி உலகம் வெறுக்க அவமதித்தனர். இராஜகுமாரர்களைச் சிலநாள் தங்கவைத்துக் குமாரத்திகளுடனும் மாளவபூபதியுடனும் தக்கமரியாதைகள் செய்து அனுப்பிவிட்டு அரசன் வாழ்ந்துவந்தனன்.

13. சிறைச்சாலை.

அரசன்மனைக்கு ஒரு நாழிகை தூரத்தில் ஓர்பெரிய சமப்பரப்பில் கால்நாழிகை சமசதுரத்தில் கோட்டை ஒன்றுகட்டிச் சுற்றும் அகழ்வெட்டிச் சூத்திரப்பாலமமைத்துக் காவலாளிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அக்கோட்டையின் வடபுரத்தில் சிறைச்சாலை ஒன்று கட்டி அதனில் நூறு அறைகளமைத்து ஒவ்வொரு அறையும் 10 கஜம் நீளம் ஐந்துகஜ அகலம் மூன்று கஜஉயரமாயும் ஒருவன் உள்ளே பிரவேசிக்கக்கூடிய சிறு இரும்புக்கதவும் உள்ளேயிருப்பவரைப் பார்க்க ஒரு நாலங்குலக் குறுக்களவுடைய வட்டத்துவாரமும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அறைக்கும் ஒரு இருப்புச்சாளரமும் ஓர் பிலத்துவாரமு மிருந்தன. இத்துவாரவழியாய்ச் சென்றுவசிக்க 3கஜநீளம் 2கஜ அகலம் 3கஜவுயரத்தில் ஒவ்வோரிருட்டறையு மமைக்கப்பட்டிருந்தது. இவ்வறைக்கு காராக்ரகம் என்று பெயர் கோமளாங்கனும் விக்ரமகேதுவும் இவ்வறைகளி லொவ்வொன்றி லடைக்கப்பட்டுத் திறவுகோல், அன்ன மளிப்பவனிடம் கொடுக்கப்பட்டு உணவளிக்கும்போது திறப்பதும் குற்றவாளி உண்டபின் பூட்டுவதுமாயிருந்தது. ஒவ்வோர் அறைக்கும் இரண்டு சேவகர்கள் ஆயுதம்தரித்துக் காவல் புரிந்திருந்தனர். ஒரு நாள் கோமளாங்கன் சாப்பாட்டுவேளையில் அன்னமளிப்பவனை வினயமாய், "ஓ ஐயா நான் இந்த எட்டுமாதகாலமாய்க்கடுஞ்சிறையிற்காலந்தள்ளினேன் இனி என்பிராணன்எப்போதகலுமோவென்று காத்திருக்கிறேன். அறிந்து அரசனுக்கு யாதொருகுற்றமுஞ் செய்யவில்லை. என்னகுற்றஞ் செய்திருந்திடினும் இத்தண்டனை ஒருநாளனுபவிக்கின் எப்பேர்ப்பட்டகெட்ட நடவடிக்கையுள்ளவனும் சன்மார்க்கனாவான்" என்று தனக்குள்தானே சொல்பவன்போல் அவனை வசப்படுத்த நினைத்துச் சொன்னான். குற்றவாளிகளுடன் வார்த்தையாடுவது ஓர் பெரிய குற்றமென்று திட்டம்செய்திருந்தமையால் சுபோதகனென்னும் அவ்வதிகாரி மௌனமாயிருக்கவும், சேவகர்கள் கோமளாங்கனை யதட்டி, "என்னடா பேச்சுக்கு முயலுகின்றாய்" எனவே அவன் அறைக்குட் சென்றனன்.

விக்ரமகேது இருட்டறையி லடைக்கப்பட்டது முதல் தனது துர்அதிர்ஷ்டத்திற்கும் கோமளாங்கனிடம்வைத்த நம்பிக்கைக்கும் அதனாற்படுங் கஷ்டங்கட்கும் நொந்துவாடிக் கடவுளை த்யானித்து அன்பு

பூண்டு இனியாவது என்னெண்ணத்தைச் சீர்ப்படுத்திக் குற்றமற்ற குலசேகரப்பெருமாள் சக்கரவர்த்திக்குப் பக்தியாய் ஊழியஞ்செய்ய நேரிடவேண்டுமென்று தினந்தோறும் கடவுளை வணங்கி உணவருந்தாமல் தேகம் மெலிந்து கறுத்து நாட்கள் கழித்துவந்தவன் இரண்டுமாதகாலமாய்ச் சந்தோஷமும் தைர்யமுமுண்டாய்க் கடவுளைப்பணிந்துஉணவருந்திப் பலம்பெற்று வருபவனாயினான். ஏனெனில் ஒரு நாள் அறைக்குட் செல்லும்போது ஓர் இருப்புப் பாளத்தில் அவன் கை அகப்பட்டுச் சிறிது கிழிந்துவிட்டது. அதைச் சோதிக்க ஓரடி நீளம் 3 அங்குல அகலமான ஓர் இருப்புப்பாளம் ஆணிகளினின்றும் விடுபட்டுத் தொங்கியிருந்தது. அதைக் கைப்பற்றி இதனால் சிறைமீட்டுக் கொள்ள அவன் எண்ணியிருந்தனன். கோமளாங்கனை அடைத்திருந்த அறை அருகிலிருந்தமையால் அதற்கு அவ் விருப்புப்பாளத்தினுதவியால் ஓர் வழி செய்து அவனுடன் வெளிப்புறத்திற்குச்சுரங்கம் ஒன்றுசெய்யத் தலைப்பட்டனன். இருவரும் விடாமுயற்சியாய்ச் சிறுகச்சிறுக இரண்டு மாதத்தில் காவலாளிகட்குப் புலப்படாமற் சுரங்கம் செய்து முடித்தனர். ஒருநாள் இரவில் பதினைந்து நாழிகைக்குமேல் இருவரு மச்சுரங்கம் வழியாய் வெளிப்போந்து அகழ்கடந்து அதிவேகமாய் அரவமொன்றுஞ்செய்யாமல் வனம்நோக்கி ஓடிச்சென்று ஓர் ஏகாந்த விடத்திலமர்ந்து கவலை தீர்ந்து, பிறகு விக்ரமகேது கோமளாங்கனைவிளித்து, "அப்பா இப்போது சந்திரப்பிரகாசமிருப்பதால்இனிக் காலதாமதம் செய்யலாகாது. நீ இனி என்னை மறந்துவிடு. நீ மகா துஷ்டன். இராஜகுமாரிகளை வதைக்க முயன்றவன் உன்னை நம்பியதற்கு வேண்டிய தண்டனை யனுபவித்தேன். கடவுள் என் கஷ்டங்களைக்கண்டிரங்கி உதவிபுரிந்தார். நானுன் னுதவியைக் கோரியது ஒருவனால் இந்தக் கஷ்டமான காரியம் முடிவு பெறாதென் றல்லாது உன்மேல் அன்பாலல்ல. நானுனக்கு இனிமேல் சத்துரு. காராக்ரகத்தி லகப்பட்டதுமன்றி என் உத்தியோகத்தையும் உன்னாலிழந்தேன் தவிர, இராஜத்துரோகியுமானேன் இனி இந்நாட்டைத் துறந்து வேறிடஞ்சென்று கடவுளருளால் ஜீவனஞ்செய்து நாட்கழிப்பேன்" என்று எழுந்தான். கோமளாங்கன் பயந்து இனி யாது விளையுமோவென்று மதிமயங்கி மறுபடியும் விக்ரமகேதுவை வசப்படுத்தப் பல ஆசை வார்த்தைகள்கூற அவைகளுக்கிடங்கொடாமல் அவன் கோமளாங்கனைவிட்டகன்றான். கோமளாங்கன், "நான் தனியானேனே, எப்படிப்பட்டணஞ் செல்வது; தமையனையும் தந்தையையும் எங்கு எப்போது பார்ப்பது" என்றுபலவாறு எண்ணி ஒன்றும்தோற்றாது துக்கித்து விக்ரமகேது போன மார்க்கத்தையும் கவனியாமல் கிடந்து நித்திரைபோயினான்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[752-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

375. நெய்யிலங் கெஃகினர் நிறைந்த விஞ்சையர்
கையிலங் கிட்டியர் கழித்த வாளினர்
மெய்யிலங் குறையினர் விசித்த கச்சையர்
வையகங் காவலன் மருங்கு சுற்றினார். 138.

நிறைந்த விஞ்சையர் - பலவித்தைகளிலும் தேர்ச்சி முற்றிய வித்தியாதர வீரர், கை-கையில்பிடித்த, நெய் இலங்கு எஃகினர்-நெய்பூசப்பட்டுப் பளபள வென்று விளங்கும் வேலினராயும், இலங்கு கிட்டியர் - விளங்கும் கிட்டியினராயும், கழித்த வாளினர் - உறையை விட்டு உருவிய கத்தியினராயும், மெய் இலங்கு உறையினர்-உடலின்மேல்இட்ட கவசத்தினராயும், விசித்த கச்சினர் - அரையிற் கட்டிய கச்சையுடையவராயும், வையகம் காவலன் மருங்கு சுற்றினார்-அரசனை நாற்புறத்திலும் சூழ்ந்து காத்துச் சென்றார்.

உறை - சட்டை, என்றுமாம்.

---

376. சுரும்புசூழ் பிணையலுஞ் சுண்ண மாரியும்
கரும்புசூழ் கிளவியர் சொரிந்து கைதொழ
நிரம்புநூ னிமித்திகன் மாட நீள்கடை
அரும்புசூழ் தெரியலான் அருளி னெய்தினான்.

கரும்புசூழ் கிளவியர்-கரும்பின் தித்திப்பைபோ வென்று கேட்டார் நினைக்கத்தக்க இனிய சொல்லினராகிய பெண்கள், சுரும்புசூழ் பிணையலும் - வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் பூமாலைகளையும், சுண்ணம் மாரியும்-வாசனைப் பொடியின் மழையையும், சொரிந்து-சொரிந்து, கைதொழ - கையால்வணங்கித் தன்னை எதிர்கொள்ள, அரும்புசூழ் தெரியலான்-அரும்புகளைப் புறத்தே வைத்துக் கட்டிய பூமாலையை அணிந்த மன்னன், நூல் நிரம்பு நிமித்திகன் - நிமித்தகநூற்கல்வி நிரம்பியவன், மாடம் நீள்கடை - மாளிகையின் நெடிய கடைவாயிலை, அருளின் எய்தினான் - அருளுடன் சேர்ந்தான்.

நிமித்திகன் - சகுனங்களைப் பார்த்து எதிர்கால நிகழ்ச்சிகளை அறிபவன்.

---

377. எங்குல விளங்கவிங் கருளி வந்தவெம்
கொங்கலர் தெரியலாய் கொற்றங் கொள்கென
மங்கல வுழைக்கலம் பரப்ப மன்னனுக்
கங்கலர் கேள்வியான் ஆசி கூறினான். 140.

அலர் கேள்வியான் - கல்வியால் மலர்ந்த கேள்வி ஞானத்தையுடைய சதவிந்து, மங்கலம் உழைக்கலன் பரப்ப - எண் வகையான மங்கலப் பொருள்களையும் எதிரிலே வைத்து, எம்குலம் விளங்க - எங்கள் குலம் பெருமையை அடையுமாறு, இங்கு அருளிவந்த-என் வீட்டுக்குவந்தருளிய, எம்கொங்கு அலர் தெரியலாய்-எங்கள் நாயகனான வாசனைவிரிந்த மாலையை அணிந்த வேந்தே, கொற்றம் கொள்கஎன-நீ என்றும் வெற்றியே பெறுவாயாக என்று, மன்னனுக்கு ஆசி கூறினான் - மன்னனுக்கு ஆசீர்வாத மொழிகளைச் சொன்னான்.

பரப்ப - பரப்பி.

---

378. கொண்டமர்ந் தகிற்புகை கழுமிக் கோதைவாய்
விண்டமர்ந் தொழுகுவ மதுக்கள் வீழ்ந்துராய்
வண்டமர்ந் தொலிசெயு மருங்கு கொண்டதோர்
மண்டப மணித்தலம் மன்னன் எய்தினான் 141.

கொண்டு - அவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, மன்னன்-அரசன், அகில் புகை கழுமி - அகிலின்புகை நிறைந்து,கோதைவாய்விண்டு அமர்ந்து ஒழுகுவ மதுக்கள் வீழ்ந்து - மாலையிலுள்ள பூக்கள் மலர்ந்து விரிந்து உள்ளேயிருந்து ஒழுகும் தேன்களை விரும்பி, உராய் - அவற்றில் விழுந்து, அமர்ந்து - படிந்து,வண்டு ஒலி செய்யும் - வண்டுகள் ரீங்காரஞ் செய்யும், மருங்கு கொண்டது ஓர்-பக்கச் சோலையை உடையதொரு, மண்டபம் மணித்தலம் - மண்டபத்தில் இடப்பட்ட இரத்தினாசனத்தில், எய்தினான் - எய்தி இருந்தான்.

'மருங்குல்' என்ற பாடத்துக்கு இடைவெளி, நடுவிடம் எனக் கொள்க.

---

379. தழைபவிழ் சந்தனப் பொதும்பு போன்மது
மழைதவழ் மண்டப மலிர வீற்றிருந்
துழையவர் குறிப்பறிந் தகல வொண்சுடர்க்
குழையவன் குமரிதன் கருமம் எண்ணினான்.

தழை அவிழ் சந்தனம் பொதும்பு போல் - தழை மலிந்த சந்தனமரப் பொதும்பரைப்போல, மது மழை தவழ்-தேனாகிய மழை இடையறாது ஒழுகும், மண்டபம் மலிர வீற்றிருந்து - மண்டபம் பொலிவுறும்படி மேலான ஆசனத்திலிருந்து, குறிப்பு அறிந்து உழையவர் அகல - மன்னனுடைய எண்ணத்தைக் குறிப்பாலுணர்ந்து பக்கத்திலிருந்தவ ரெல்லாம் அவ்விடத்தை விட்டகல, ஒண்சுடர் குழை அவன் - ஒளி பொருந்திய காந்தியோடுகூடிய குழைகளை அணிந்த அம்மன்னன், குமரிதன் கருமம் எண்ணினான் - தன் மகளின் கலியாண விஷயத்தை நினைத்தான்.

---

380. கனைத்தெதிர் கதிர்மணிக் கடகஞ் சூடிய
பனைத்திர ளனையதோட் படலை மாலையான்
மனத்தினை மறுவினூல் வாயி னாற்சொல
நினைத்திவை விளம்பினான் நிமித்தநீதியான். 143.

நிமித்த நீதியான் - நிமித்தநூல் வல்லவனாகிய சதவிந்து, கனைத்து.எதிர் கதிர்மணி கடகம் சூடிய - திரண்டு வெளிப்படும் ஒளிக்கிரணங்களையுடைய இரத்தினங்கள் இழைத்த கடகங்களை அணிந்த, பனைதிரள் அனையதோள் - பனையின் திரண்ட அடிமரத்தைப் போன்ற தோள்களில் புரளும், படலை மாலையான் - தொடுக்கப்பட்ட பூமாலையை அணிந்த மன்னனுடைய, மனத்தினை-உள்ளக்கருத்தை, மறு இல்நூல் வாயினால் சொல - குற்றமற்ற சகுனசாஸ்திரம் தன் வாயினால் தனக்குத் தெரிவித்த விஷயங்களை, நினைத்து - நோக்கி ஆராய்ந்து, இவை விளம்பினான் - பின்வரும் வார்த்தைகளைச் சொன்னான்.

கனைத்தல் - மிகுதல், அதிகரித்தல். படலை - ஒருவகை மாலை விசேஷம்.

---

381. மணங்கமழ் மதுமல ரலங்கன் மாலைபோல்
வணங்கெழி லுடங்கிடை மாழை நோக்கிநங்
கணங்குழை கருமமாம் கருதிற் றென்றனன்
அணங்கெழில்விரிந்தநூ லலர்ந்தநாவினான். 144.

அணங்கு எழில் விரிந்த நூல் அலர்ந்த நாவினான். தெய்வத்தன்மையாகிய அழகை மிகக்கொண்ட சகுன சாத்திரத்தை நன்றாகக் கற்றுத்தேர்ந்த நாக்கினை உடையவனான சதவிந்து என்பவன், மணம் கமழ் மதுமலர் அலங்கல் மாலைபோல் - வாசனையை வீசும் தேனையுடைய மலரால் தொடுக்கப்பட்ட மாலையைப் போல, வணங்கு எழில் - ஒல்கிய அழகையும், நுடங்குஇடை - துவளும் இடையையும் உடைய, மாழைநோக்கி - மாம்பிஞ்சையொத்த கண்களைக் கொண்டவளாகிய, நம்கணம் குழைகருமம்- பலவுறுப்புக்களோடு கூடிய குழைகளை அணிந்த நமது சுயம்பிரபையின் கலியாண விஷயம், கருதிற்று ஆம் - நீ கருதி வந்தது ஆகும், என்றனன்-என்று கூறினான்.

அலங்கல் மாலை - இருபெயரொட்டு வணங்குதல்-வளைதல், ஒசிதல் மாழை - மா(வடு).

---

382. வெண்ணிலா விரிந்தென விளங்கு மாலையான்
கண்ணிலாங் கவர்தகைக் கண்ணி மன்னனை
மண்ணிலா மறுகிடை வலங்கொண் டெய்தினான்
எண்ணிலாங் கதுதிரு வெதிர்ந்த வண்ணமே. 145.

வெண்மை நிலா விரிந்த எனவிளங்கும் மாலையான்- வெண்மையான நிலாவொளி பரந்தாற்போல விளங்கும் மல்லிகைமலர் மாலையை அணிந்தவனாகிய, கள் நிலாம் கவர் தகை கண்ணி மன்னனை-தேன் பொதிந்த (வண்டுகள்) விரும்பத்தக்க கண்ணியைச்சூடிய மன்னனாகிய நின்னை,மண் இல்லா(த)-இந்த மண்ணுலகத்தில் இல்லாத, மறுகுஇடை - தளரும் இடுப்பினளாகிய (அணங்குபோன்ற) சுயம்பிரபை, வலம்கொண்டு எய்தினான் - போழகாகிய ஆற்றலோடு உனக்குமகளாக வந்துற்றாள், எண்ணில் - ஆய்ந்துபார்த்தால், அது - அவள் அவ்வாறு பிறந்தது, திரு எதிர்ந்த வண்ணமே- உனக்கு (பெரும்)செல்வம் வந்துற்றதன்மையதாகும்.

---

383. பொன்சுலாஞ் சுடரிழை பொறுத்த பூண்முலை
மின்சுலா நுடங்கிடை மெல்லிய லாடிறம்
என்சொலா லின்றியான் இயம்பு நீரதோ
மன்சுலா வகலநின் றலரும் வாளினாய். 146.

மன்சுலாவு அகல-உன்னைச்சூழ்ந்து சுற்றிய (பகை) மன்னரின் கூட்டம் நீங்குமாறு, நின்று அலரும் வாளினாய் - அவர்களைக் கொன்று நின்று விளங்கும் வாளையுடைய மன்னா, சுடர்சுலாம் பொன் இழை பூண் பொறுத்தமுலை -ஒளியைச்சுற்றிலும் வீசும் பொன்னாலாகிய ஆபரணங்களைத் தாங்கிய முலைகளையும், மின் சுலாம் நுடங்கிடை - மின்னலின் தன்மை முழுதும் வாய்ந்த துவளும் இடுப்பினையும் உடைய, மெல் இயலாள் திறம் - உன்மகளின் பெருமை, இன்று யான் என் சொல்லால் இயம்பும் நீரதோ-இன்று யான்எனது புன்சொற்களால் சொல்லும் தன்மையதன்று.

---

384. ஆதிநாள் அறக்கதி ராழி தாங்கிய
சோதியான் திருமொழி விளக்கிற் றேன்றுமால்
போதுவார் புரிகுழற் பொலன்கொம் பன்னவிம்
மாதராள் வனமுலைக் குரிய மைந்தனே. 147.

போது வார் புரிகுழல்-பூக்களைச்சூடிய நீண்டநெறித்த கூந்தலை உடைய,பொலன் கொம்பு அன்ன - அழகிய பூங்கொம்பைப் போன்ற, இ மாதராள் - இந்த மங்கையின், வன முலைக்கு உரிய மைந்தன் - அழகிய முலையைத் தழுவுதற்குரிய கணவன் (எவன் என்பது) ஆதிநாள் - பண்டைக்காலத்திய, அறம் கதிர் ஆழி தாங்கிய - அறமாகிய ஒளி பொருந்திய சக்கரத்தை ஏந்திய, சோதியான் - சுயம்பிரகாசனான அருகதேவனது, திருமொழி விளக்கில் - திருவாக்காகிய ஆகமமாகிய விளக்கினொளியால், தோன்றம் - புலப்படும்.

385. அப்மயி லனையவ டிறத்தி னாரியன்
செய்ம்மையில் விளம்பிய செல்வங் கேட்டலும்
மெய்ம்மயிர் தெரிந்தொளி துளும்பு மேனியன்
பொய்ம்மையில்புகழவன்பொலிந்ததோன்றினன்

அம் மயில் அனையவள் திறத்தின் - அழகிய மயில் போன்ற சாயலையுடைய தனது மகளின் மணவிஷயமாக, ஆரியன் - அருகதேவன், சேய்மையில் - ஆதி காலத்தில், விளம்பிய - தனது ஆகமத்தில் கூறியுள்ள, செல்வம் - செல்வவரத்தை, கேட்டலும் - நிமித்திகன் சொல்லக் கேட்டவுடன், பொய்மைஇல்புகழ் அவன் - நிஜமான புகழையுடைய மன்னன், மெய் மயிர் தெரிந்து - உடம்பில் புளகம்தோன்றி, ஒளி துளும்பு மேனியன் - ஒளிததும்பும் மேனியனுப், பொலிந்து தோன்றினன் - பொலிவுற்று விளங்கினன்.

செய்மை - சேய்மை (குறக்கல் விகாரம்). செய்ம்மை, மெய்ம்மயிர், பொய்ம்மை - மகரவொற்று விரித்தல் விகாரம்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[754-வது பக்கத் தொடர்ச்சி]

கலிப்பாவின் உறுப்புக்கள், தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என ஆறு ஆகும் என்றும், இவ்வுறுப்புக்கள் சிலவும் பலவுமாய் அமைவதற்கேற்றவாறு கலிப்பா, பின்வரும் படத்தின் படி பல பிரிவுகளை யுடையதென்றுங் கூறினேம்:—

கலிப்பா
- I ஒத்தாழிசைக் கலிப்பா
  - (1) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
  - (2) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
  - (3) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா
- II வெண்கலிப்பா
- III கொச்சகக் கலிப்பா
  - (1) தரவு கொச்சகம்
  - (2) தரவிணைக் கொச்சகம்
  - (3) சிஃறாழிசைக்கொச்சகம்
  - (4) பஃறாழிசைக்கொச்சகம்
  - (5) மயங்கிசைக் கொச்சகம்

இனி இக்கலிப்பா வகைகளின் இலக்கணங்களைக் காண்பதன்முன், தரவு முதலிய உறுப்புக்களின் தன்மை யாதெனச் சிறிது அறிதல் வேண்டும்.

1. தரவு:—இது கலிப்பாவின் முதலாக நின்று பாட்டின் விடயத்தை எடுத்துத் தரும் உறுப்பாகும். இப்படி விடயத்தை எடுத்துத் தருதலால் இதற்குத் தரவு எனப் பெயர் வந்தது.

தரவென்னும் இவ்வுறுப்பு மூன்றுக்குங் குறையாத பல அளவடிகளால் அமைந்திருக்கும்; பன்னிரண்டு அடிகளுக்கு மேற்படாது. பெரும்பாலும் புளிமாங்காய் கருவிளங்காய்ச் சீர்களே வரப்பெறும். கலிப்பா எல்லாவற்றிற்கும் தரவு என்னும் இவ்வுறுப்பு இருந்தே தீரவேண்டும். (எனினும் கொச்சக வொருபோகு எனும் செய்யுள் தரவு இல்லாமலும் வரும்) பொதுவாக ஒரு கலிப்பாவிற்கு ஒரு தரவே இருக்குமெனினும் இரண்டு தரவுகள் இருத்தலுங் கூடும். சென்றவாரம்உதாரணமாகக் காட்டிய கலிப்பா, இரண்டு தரவுகளை உடையது—தரவு என்பதற்கு எருத்தம் என்றொரு பெயருமுண்டு.

2. தாழிசை:—இது கலிப்பாவின் இரண்டாவது உறுப்பு. தாழ்ந்து இசைப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. தரவு எடுத்துத்தந்த விடயத்தைத் தாழிசை வளர்க்கும். தாழிசையும் புளிமாங்காய் கருவிளங்காய்ச் சீர்கள் மிகுந்த அளவடிகளால் ஆவது. தாழிசைகள் இரண்டு மூன்று,நான்கு அடிகளையுடையனவாய் இருக்கலாம். எனினும், தரவில் வந்துள்ள அடிகளைவிடத் தாழிசையின் அடிகள் குறைந்திருத்தல்வேண்டும்.ஒரு கலிப்பாவின் தரவு மூன்றடிகளையுடையதாயின் தாழிசை இரண்டடிகளே உடையதாயிருக்கவேண்டும். தரவினடி நான்காயின், தாழிசையின் அடிகள் இரண்டேனும் மூன்றேனும் ஆகலாம். நான்கிற்கு மேல்பட்ட அடிகள் தரவில் வரும்போது தாழிசை, இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் அடிகளையுடையதாயிருக்கலாம். இத்தகைய தாழிசைகள் ஒரு கலிப்பாவினுள், மூன்றேனும் ஆறேனும், சிலபோது பன்னிரண்டேனும் வரலாம். தாழிசைகள் எல்லாம் ஒரு பொருளின்மேல் அடுக்கிவந்து அப்பொருளைப் பல வகைகளில் விவரித்துக்காட்டும். பொதுவகையில் கூறுமிடத்து, தரவு ஒருவனைக் கூப்பிடுவதுபோலும், தாழிசை அவனைக்கேட்பது போலாகிலும் அல்லது அவனுக்கொன்று உரைப்பதுபோலாகிலும் அமைந்திருக்கும் என்னலாம். ஒரேபொருளின்மேல் அடுக்கிவருவதால் தாழிசைகளின் முடிவெல்லாம் ஒரேவிதமாக இருக்கும்..தாழிசைகள், கொச்சகக்கலிப்பாவகையினல்லது, மற்றெல்லாக் கலிப்பாவிலும் வரும். தாழிசைக்கு இடைநிலைப்பாட்டு என்றொரு பெயரும் உண்டு.

3. அராகம்:—இது மூன்றுவது உறுப்பாகச் சில கலிப்பாக்களில் வரலாம். இது பெரும்பாலும் கருவிளஞ்சீர்களைப்பெற்று, மாத்திரை மிகுவதும் குறைவதுமின்றி முடுகிச்செல்லும் நடையையுடையது. ஆதலின் இவ் வராகம் என்னும் உறுப்பிற்கு முடுகியல் என்னும் பெயரும் உளது. விடயத்தை எடுத்துத் தருவது தரவு; ஒன்றினை வினவுவது போன்றேனும் இயம்புவது போன்றேனும் அமைவது தாழிசை. ஒன்றினை வர்ணித்துப் புகழும் காரியத்தைப் பெரும்பாலும் அராகம் செய்யும். ஆதலின் அராகத்திற்கு வண்ணம் என்றொரு பெயரும் உண்டு. அடுக்கியல் என்றும் இதனை அழைப்பர். அராகங்கள் நாற்சீர் கொண்ட அளவடிக்குக் குறைந்த சீருடைய அடிகளால்வராது. நெடிலடி, கழிநெடிலடிகளாலும் அமையலாம். இத்தகைய அடிகள் நான்குமுதல் எட்டு வரையில் அராசமாக வரலாம். இரண்டடிகளுடைய அராகங்கள் நான்கு வருதலுங்கூடும். அராகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளின் வருணனையைக் கூறிமுடிப்பதாயிருக்கும். ஓரடியில் பொருள் முடிந்தால் ஓரடி அராகமென்றும், இரண்டடியில் முடிந்தால் ஈரடி அராகமென்றுங் கொள்க.

4. அம்போதரங்கம்:—இது அராகத்திற்குப் பின் வரக்கூடிய உறுப்பு. ஆற்றின் அலை கரை சேரச்சேரச் சுருங்குவதுபோல் முதலில் அளவடிகளாலும், பிறகு சிந்தடிகளாலும், பிறகு குறளடிகளாலும், குறைந்து குறைந்துவருதலால் இதற்கு இப்பெயர்வந்தது. அராகங்கள், ஒரு பொருளின் அழகு அமைப்பு முதலியவைகளை வருணித்துப் புகழ்வனவாக, அம்போதரங்கங்களோ, பெரும்பாலும், வீரம் அருள் முதலியவைகளால் நிகழும் கருமங்களின் பெருமையைப் பாராட்டுவதாகும். இப்படி ஒவ்வொரு தொழிலினைக் கூறி முடிப்பது ஒவ்வொன்றும் ஓர் அம்போதரங்கம் எனக் கொள்க. அப்படி, இரண்டிரண்டு அளவடிகள்கொண்ட அம்போதரங்கங்கள் இரண்டும்—(இதனைப் பேரெண் என்பர்) - அளவடி ஒவ்வொன்று கொண்ட அம்போதரங்கங்கள் நான்கும் - (இதனை அளவெண் என்பர்)—மும்மூன்று சீர்கொண்ட அடிகள் எட்டும் (இதனை இடையெண் என்பர்) இரண்டிரண்டு சீர்கள்கொண்ட அடிகள் பதினாறும் (இதனைச் சிற்றெண் என்பர்) கொண்டமையும் அம்போதரங்ககங் உறுப்புச்சிறப்புடைத்து. இடையெண் நான்கும், சிற்றெண் எட்டும் வருதலும் உண்டு. அம்போதரங்க அடிகளில், அராகத்தைப்போலல்லாமல், காயச்சீர்களும் இயற்சீர்களும் விரவிவரலாம். சிற்றெண்ணில் ஓரசையே சீராகிய அசைச்சீர்கள் வருதலும் உண்டு. அசையடி, சொற்சீரடி, எண், பிரிந்திசைக்குறள், என்பன அம்போதரங்கத்தின் மறுபெயர்கள்.

5. தனிச்சொல்:— இது பாட்டினை முடிவிற்குக் கொண்டுவர ஆரம்பிக்கும் உறுப்பு. ஒரே சொல் ஒரு சீராய்ப் பொருள்நிரம்பி விட்டிசைத்து நிற்றல் இதன் இலக்கணம். சுரிதகத்திற்கு முன்பே இத் தனிச்சொல் ஒன்று நிற்றலே பெரும்பாலும் நிகழுமாயினும் சில கலிப்பாக்களில் இடைஇடையே தனிச்சொற்கள் சில வருதலும் உண்டு. விட்டிசை, கூன், தனிநிலை என்பன இதன் மறுபெயர்கள்.

6. சுரிதகம்:-கலிப்பாவை முடித்துவைக்கும் இறுதி உறுப்பு இது. இது (பெரும்பான்மை) ஆசிரியப்பாவாக வேனும் (சிறுபான்மை) வெண்பாவாகவேனும் அமைந்து அவ்வப்பாவிற்குரிய ஓசையை உட்கொண்டதாயிருக்கும். அடக்கியல் வாரம் போக்கியல் வைப்பு என்பன இதன் மறு பெயர்கள்.

மேற் சொன்ன உறுப்புக்களில் சிலவும் பலவுமாய்ச் சேர்ந்து அமைகின்ற திறத்தினுல் கலிப்பா பலவகைப் படும்:—

I ஒத்தாழிசைக் கலிப்பா

இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனவும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா எனவும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனவும் மூன்று வகைப்படும். இம்மூன்று வகைகளிலும் தாழிசைகள் மூன்று ஒத்து வருதலால், ஒத்தாழிசைக் கலிப்பா எனப் பெயர் வந்தது.

(1) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு ஒன்றும், தாழிசை மூன்றும்,தனிச்சொல்ஒன்றும், சுரிதகம் ஒன்றுமாய்ச் சேர்ந்து வருகின்ற கலிப்பா நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

இருசுடர்க்கு மொருமகனு யிலங்கிநின்ற குலவேந்தன்
உருப்பசியை யறத்துறந்து மதிமாழ்கி யுழல்தோற்றம்
உரைபெருக்கி வரைவதுவோ வொருபோது மெளிதன்றால்.

[இது விடயத்தைத் துவக்கித் தருவதாய் மூன்றடிபெற்று வந்த தரவு]

1

கலன்கவிழ்ந்த மீகாமனிவனென்னற் கருத்தாயின்
அவன் விழுந்த சலதிக்கு விழுதொன்று மறியீரோ.

2

மணியிழந்த பணியென்று மவனுகான் வெளியன்றி
மனத்துள்ளும் ஒளிர்கின்ற மணியொன்று மறிவீரோ.

3

உயிர்பிரிந்த யாக்கையெனின் மற்றதனைத் தொடர்ந்தேகிக்
குயில்செய்யு முடலொன்றைக் கண்டெவரு மறிவாரோ.

[இவைமூன்றும், ஒருபொருள்மேல் அடுக்கி இரண்டிரண்டடிகளால் வந்த தாழிசை.]

புகல்வதெவன்

[இது, பாட்டை முடிவிற் கொண்டுவருதற்குரிய தனிச்சொல்.]

வெறித்த நோக்கினன் விரிந்த குஞ்சியன்
அணியொ டாடையு மவிழ்ந்த நிலையினன்
கல்லுங் காழ்முதிர் மரமுங் கண்டவை
நெஞ்சம் நெகிழ்ந்துட னுருகும் பெற்றியன்
கேசிப்பே ரசுரத் தெவ்வை
வீசிப்போர் வென்ற வேந்தனு மிவனே.

[இது பாட்டின் இறுதியில் சுரிதகமாக நிற்கின்ற நேரிசை ஆசிரியப்பா]

[ஸ்ரீமான் சேஷாசல ஐயர் எழுதிய "புரூரவன் தபுதாரநிலை" என்ற கட்டுரையிலடங்கியஇப்பாட்டைக் கலாநிலயம், 1-வது வால்யூம் 734-வது பக்கத்திற் காணலாம்]

மூன்றடித் தாவு ஒன்றும், ஈரடித் தாழிசைகள் மூன்றும், தனிச்சொல்லொன்றும், ஆறடி ஆசிரியச் சுரிதகமும் பெற்று வந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா இது.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

உண்கட்ன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தங்கலந்
தாதுசேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை.

[இது எட்டடியால் வந்த தரவு.]

நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னும்மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ வைய. 1.
நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
வைவகை பாராட்டி னும்மற்றெங் கூந்தற்
செய்வினை பாராட் டினையோ வைய. 2.
குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கு
மிளமுலை பாராட்டி னும்மற்றெம் மார்பிற்
றளர்முலை பாராட் டினையோ வைய. 3.

[இவை மூன்றும் மூன்றடித் தாழிசை]

என வாங்கு

[இது தனிச் சொல்]

அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகு நும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

[இது வெண்பாச் சுரிதகம்]

—கலித்தொகை 22.

இப்பாட்டு, எட்டடித்தரவும், மூன்றடித் தாழிசை மூன்றும், தனிச்சொல்லும், வெண்பாச் சுரிதகமும் பெற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினு
லைவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிளைகளோ டுய்ப்போகு வான்போல
வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
மிறத்திரா லையமற் றிவணிலைமை கேட்டிமின்;

தாழிசை.

1

மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்காற் கலுழ்பாணுக் கண்ணெனவு முளவன்றே
சிறப்புச் செய்துழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியோர் தொடர்புபோல்

2

ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா னெகிழ்போகும் வளையெனவு முளவன்றே
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல்

3

ஒருநாணீ ரளிக்குங்கா லொளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பவசக்கு நுதலெனவு முளவன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்

தனிச்சொல்

என வாங்கு

சுரிதகம்

யாஇிற் கூறுவ தெவனுண் டெம்மினு
நீநற் கறிந்தனை நெடுந்தகை வானந்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே.

—கலித்தொகை 25.

இப்பாட்டு, பன்னிரண்டடித் தரவுடையது. தரவுகள் மூன்றடிமுதல் பன்னிரண்டடி வரையிலும் வரலாம். நான்கடித்தாழிசை மூன்று. இரண்டு முதல் நான்கடி வரையில் கொண்ட தாழிசை வரலாம். அத்தகைய தாழிசை மூன்று இருத்தல் வேண்டும். தனிச்சொல் ஒன்றுடையது. நான்கடியால் வந்த நிலைமண்டில ஆசிரியச் சுரிதகம் வந்துளது.

கலிப்பாக்களுள் இது சிறப்புடையதென்று மதிக்கப்படுவதால் நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா எனப் பெயர் வழங்கலாயிற்று. சுரிதகம் நேரிசையாசிரியப் பாவாக இருக்கலாம், அல்லது நிலை மண்டிலாமாயும் இருக்கலாம்; அல்லது இணைக்குறள் அடிமறிமண்டில ஆசிரியப்பாவாக இருப்பினும் இருக்கலாம்; அல்லது நேரிசை முதலிய வெண்பாக்களில் ஒன்றாக இருப்பினும் இருக்கலாம். ஆதலின் நேரிசை என்ற அடைமொழி இக்கலிப்பா பெறுவது சுரிதகத்தைப்பற்றியன்று.

களவியற்றுறை விளக்கம்.

[766-வது பக்கத் தொடர்ச்சி]

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே.

—குறுந்தொகை - 2.

கழுநீர்பூத் தோரு...... ருபூந் தொண்டை
முழுநீர முத்த மரும்பி—யெழுநீர்
இளம்பிறையுஞ் சூடி யெழிற்கமல முண்டே[ல்]
விளம்புவாய் நீவண்டே வேறு.

—கிளவிமாலை.

உள்ள படியுரையும் வண்டினங்கா ளோடைதொறுந்
தெள்ளி நறவந் திசைபார்க்கும்—வெள்ள
வயல்கிடந்த [தா] மரைமேல் மையெழுதுஞ் செய்ய
கயல்கிடந்த துண்டாகிற் கண்டு.

—கிளவித்தெளிவு.

பிரிவுணர்த்தலென்பது தலைவியை நீங்கநி.........ன்னிற் பிரியேன் பிரியினு மாற்றே னென்பதுபடச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

சிந்தா மணிதென் கடலமு தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
யந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோவென்னை வாட்டந் திருத்து
[வதே.

—திருக்கோவை - 12.

மின்னிற் பொலிந்தசெவ் வேல்வலத்
தால்விழி ஞத்தெதிர்ந்த
மன்ன[ற்கு] வானங் கொடுத்தசெங்
கோன்மன்னன் வஞ்சியன்னாய்
நின்னிற் பிரியேன் பிரியினு
மாற்றேன் நெடும்பணைத்தோள்
பொன்னிற் பசந்துமெய் வாடியென்
னுங்கொல் புலம்புவதே.

—பாண்டிக்கோவை.

இனையல் வாழி பிரிவொன் றிலனே
நனைமலர் நறும்பூங் கோதை
யமைவெனு......நா னகன்ற ஞான்றே.

—பொருளியல்.

குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்ப னாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரை[க்] கொங்கி னன்ன
நுண்பஃ றுத்தி மாஅ யோளே
[நீயே,]அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற்[சே]க்குங்
கடல்சூழ் மண்டலம் பெறினும்
விடல்சூ ழலனே நின்னுடை நட்பே.

—குறுந்தொகை - 300.

நின்னிற் பிரிந்தியா னாற்றுவனோ நின்மே[னி]
பொன்னிற் பசந்து புலம்புவதென் - தன்னின்
மயிர்பிரிந்தா லென்னாகு மானமா மாயு
முயிர்பிரிந்தா லென்னா முடம்பு.

—கிளவித்தெளிவு.

இடமணித்தென்ற லென்பது பிரியநினைந்த தலைமகன் இடம் அணித்தென்றல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

வருங்குன்ற மொன் றுரித் தோன்றில்லை
யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி
யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள
பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக
மேய்க்கும் கனங்குழையே.

—திருக்கோவை - 15.

பாவணை யுந்த[மிழ் வேந்]தன் பராங்குசன் பாழிவென்ற
வேலணை வெஞ்சிலை யான்வஞ்சி யன்ன யினையலெம்மூர்த்
தூவண மாடச் சுடர்தோய் நெடு[ங்]கொடி துன்னிநும்மூர்
ஆவண வீதியெல் லாநிழல் பாயநின் றண்வருமே.

—பாண்டிக்கோவை.

நிலவென விளங்கிய நின்...யொளியாரத்
திளமுலை பாராட்டி யிரங்குவ தெவனோ
வறுமையொடு சென்றாற் கருள்முகங் காட்டி
மறுப்பதை யறியா வெ...வற்
கறத்தொடு புகழென வணிய நம்மூரே.

—பொருளியல்.

இனையல் வாழி யெம்மூர் மலர்ந்த
பழனத் தாமரை கெழீஇ வ[ண்டு]நின்
கண்ணென மலர்ந்த காமர் சுனைமலர்
நறுங்கண்ணி நாளு நலனுக ரும்மே.

—சிற்றெட்டகம்.

நெடுவே றுடகியநீர நீ...மதி காதல்
வடிவே றுடக்கியநீர் மாதோ—நெடுவேய்க்
கணமா மழைக்குவட்டெங் கார்வரைப்பூஞ் சாரல்
மணநாறு [நின்வரை]மேல் வந்து.

—அகத்திணை.

நின்னுடைய கூந்த னிறத்தால் நிரைவளையா
யென்னுடைய வூரு மிருளாகு—நின்னுடைய
முத்த[னைய]வெள்ளை முறுவலா லென்மலைய
மத்தனையும் வெள்ளைநில வாம்.

—கிளவித்தெளிவு.

எய்துதற் கருமையென்பது புணர்ந்து நீங்கியதலை......மக னுயவெள்ளத்துட் கண்ட தலைமகளை யரிய ளென்பதுபடச் சொல்லுதல். என்னை?

'கொய்தழை யல்குல் கூட்டம் வேண்டி
யெய்துதற் கருமை யிறப்பப் புகழ்ந்தன்று'

—வெண்பாமாலை, 11, 7.

என்றாராகலின். அதற்குச் செய்யுள் வருமாறு:—

புணர்ப்போ னிலனும் விசும்பும்
பொருப்புந்தன் பூங்கழலின்
றுணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல்
லோன்றில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன்
னீர்மையிந் நீர்மையென்றாற்
புணர்ப்போ கனவோ பிறிதோ
வறியேன் புகுந்ததுவே.

—திருக்கோவை 17.

இருநிலங் காரண மாக நறையாற் றிகன்மலைந்தார்
பொருநிலவேந்தரைப் பொன்னுலகாள்வித்த பூமுகவேற்
[கின்
பெருநிலங்க[ாவலன்றெ]ன்புன னாடன்னபெண் ணணங்
திருநலஞ்சேர்ந்ததெல் லாங்கனவேயென் றுசிந்திப்பனே.

—பாண்டிக்கோவை.

(உயிரெனவியத்தல்...) ... ...
கலைமதி வாய்மைக் கலுழ்(ா)பா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தேரங்க மும்பெற் றநநதசச
..................மதில் வச்சிர நாடன்ன வாணுதறன்
முலையிணை தோய்ந்ததெல் லாங்கன வேயென்று
[முன்னுவனே.

—பல்சந்தமாலை.

..................மடந்தை கூட்டங்
கனவே தேரின் யாவது
நனவே யாயினு நண்ணலோ வரிதே.

—பொருளியல்.

உயிரெனவியத்தலென்பது தலைவியிடத்துவைத்தஆதரவின் மிகுதியாலே தனதுயிரென வியத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

நேயத்த தாய்நென்ன லென்னைப்
புணர்ந்துநெஞ் சம்நெகப்போ
யாயத்த தாயமு தாயணங்
காயர னம்பலம்போற்
றேயத்த தாயின்றென் சிந்தைய
தாய்த்தெரிந் தாற்பெரிது
மாயத்த தாகிய தோவந்து
நின்றதெம் மன்னுயிரே.

—திருக்கோவை - 39.

இன்னுயிர் கண்டறி வாரில்லை
யென்ப ரிகன்மலைந்தா[ர்]
மன்னுயிர் வான்சென் றடையக்
கடையலுள் வென்றவையந்
தன்னுயிர் போ[னி]ன்று காக்குமெங்
கோன்கொல்லித் தாழ்பொழில்வாய்
என்னுயி ராயத் திடையிது
போய்நின் றியங்குவதே.

பாண்டிக்கோவை.

புல...ன்றென்ப வின்னுயி ரிதுவே
யலர்முலை யாயத் தாங்க
ணிலவொளி மதியென நிலவுமென் னுயிரே.

—பொருளியல்,

தொன்ன...யொர்யாக்கைக்குக் கூடுயிரோவொன்றென்ப
ரென்னுயி ரோரிரண்டா யான்கண்டேன்—மின்னுகலைப்
பைம்மலைத்[தவ]ல்குற்றுப் பாடகக்காற் றொன்றொன்று
வெம்முலைத்து வேல்போல் விழித்து.

—அகத்திணை.

என்னுயிர் நான்கண் டிளமுலையும் வேய்த்தோளும்
பொன்னிறமுங் கொண்டு புனமயில்போல்—மன்னி
யெங்குகின்ற நெய்தல்வாய் வ......... ன வெற்பி
லியங்குகின்ற தாயத் திடை

—கிளவிவிளக்கம்.

கண்ணினாற் றம்முயிரைக் கண்டறிவா ரில்லென்பர்
[கண்ணினா]லென்னுயிரைக் கண்டேனான்-கண்ணினால்
மானேக்குஞ் சாயல் மயி...... ... ...
... ...

—கிளவித்தெளிவு.

பாங்கியையுணர்தலென்பது தலைமகளைத் தனதுயிரென..............ணர்ந் திவள் போலு மிவட்குச் சிறந்தாளென......................................

[உயிரொன் றுளமுமொன் றொன்றே
சிறப்]பிவட் கென்னொடென்னப்
பயில்கின்ற சென்று [செவியுற
நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவ]ன்
றில்லைச்சிற் றம்பலத்துப்
...... கூத்த னருளென
...மொழியே.

—திருக்கோவை-18,

188937

......ளவைத்தெனக் கெவ்விடத்துந் தோழியென்னுருயி ரென்பது.

................காட்டுஞ்செ..............[பொ]ழில்சூழ் கோழியும் வானவன்.......................................
........................கொண்டவன் வண்டறைதார்ப் பூழியன் மாறழை காரனை யாள்படைப் போர்விழியே.

—பாண்டிக்கோவை.

[நோ]க்கினும் பிறர்முக நோக்காள் சாரினும்
பூக்குழன் மடந்தை தோள்சா ரும்மே
யன்ன தலையளி யுடைமை [யி]
னின்னுயிர்த் தோழி யேந்திழை யிவட்கே.

—பொருளியல்.

பாங்கனை நினைதலென்பது இவ்வகைப் பாங்கியை புணர்ந்து ஆற்றுனுகிய தலைவன் பாங்கனை நினைந்து ஆற்றுதல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

பூங்கனை யார்புனற் றென்புலி
யூர்ப்புரிந் தம்பலத்து
ளாங்கெனை யாண்டுகொண் டாடும்
பிரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக்
கண்டிப் பரிசுரைத்தா
லீங்கெனை யார்தடுப் பார்மடப்
பாவையை யெய்துதற்கே.

—திருக்கோவை-19.

கயலணி யார்கழற் காவல
ரோடக் கடையல்வென்ற
வயலணி வேலரி கேசரி யொனரு
ரென்பது...............
னுயிரனை யான்றனைக் கண்டுரை
செய்தா லொழிதலுண்டே
குயின்மொழி யாடனைச் சென்றியா
னின்னமுங் கூடுதலே.

—பாண்டிக்கோவை.

உடையை வாழி நெஞ்சே யிடைக்கொண்
டழுங்க லோம்புமதி தழங்கொலி மிகுநீர்
வழுத்தூா காக்கும புனை
விழுத்துணைக் [கா]ன்ற மிகுபெருங் கிளையே.

—பொருளியல்.

இவையெல்லாம்

'அதுவே, தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்'

—இறை - 2.

என்னு மிலக்கணத்துட் கண்டுகொள்க. இயற்கைப் புணர்ச்சி முற்றும். (உரு)

—<>*=*<>—

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 8. சித்திரகூடப் படலம்.

[745-வது பக்கத் தொடர்ச்சி.]

பாந்தளும் படியெனக் கிடத்தல் விந்தையோ.

பரத்துவாஜமுனிவன் பகர்ந்தவண்ணம் "தேவர் கைதொழுஞ் சித்திரகூட" பருப்பதத்தை இராம இலக்குமணர் சீதையுடன் சென்றடைந்தனர். வேந்தனால் விதிக்கப்பெற்ற வனவாசம் இங்கிவர்தம்க் கின்று முறையே ஆரம்பமாகின்றது. இனி இவ்விராமன் முடிப்பதற்குரிய அரிய பெரிய கருமங்கள் பலவுள. தயரதனைப் போன்று நாமும் இராகவனை ஓர் "சிறு மானுடன்" எனமதித்து அவன் செயல்களின் நேர்மையை அம் மானுடஅளவைகொண் டளந்தலமராவண்ணம் கம்பர், "நினையும் தேவர்க்கும் நமக்கும் ஒத்து ஒருநெறி நின்ற அனகன் அங்கணன் ஆயிரம் பெயருடைய அமலன்" என வனவாசத்தின் தலைப்பிலேயே அவன் பரத்துவம் நமது கருத்தில் நிலைத்திருக்கும்படி வற்புறுத்துகின்றனர். இவன் சனகன் மாமடமயிற்கு அக்கனகமால்வரை இயல்பெலாந் தெறிவுறக் காட்டிய காட்சிகள் கண்ணினோடு கருத்தையும் குளிர்விக்கும் நலம் மிக வாய்ந்தன. தயரதன் அனிகத்திற் கலந்துசென்று முன் சந்திரசைலத்திற்றங்கி அவ்வரையின் வனப்பெலாங் கம்பர்தம் கண்கொண்டு பார்த்தவர், இன்று இராகவன் துணைவர இந்தச் சித்திரகூட மலையினை நோக்குங்கால், மேற்பார்வைக்கு இவ்விரு வரைகளுக்கிடையே பெரியதொரு வேற்றுமை இல்லையேபோற் றேன்றலாமெனினும் சற்றே சிந்திக்குமளவில் இவையிரண்டும் ஒரியல்பின வல்லவென்னுமருமை உணர்வதற்குரியதாகும்.

அருந்தவத் தந்தணர் இருந்துவாழும் சிறப்புடையது சித்திரகூடம். அன்னவர் இருத்தலாலே இப்பொருப்பின் இயற்கையும் உயர்ச்சியடைகின்றது. சந்திர சயிலத்தில், "கொம்புகள் பணைக்கை நீட்டிக் குழையொடும் ஒடித்துக் கோட்டுத் தும்பிகள் உயிரேயன்ன துணைமடப் பிடிக்கு நல்கும்." அப்படியே சித்திரகூடத்திலும்,

உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுஞ் செந்தேனினை முழைநின்றும் வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது காணாய்

[மனமுருகும் காதலோடு, தழையினால், ரீங்காரம் செய்யும்வண்டுகளையோட்டி, நன்மணம் பொருந்திய செந்தேனைக் கல்முழைகளிலிருந்து எடுத்து, முதிர்ந்த சூல்கொண்ட தன் இளம்பெண்யானைக்குக் குடிக்கும்படி அதன்வாயிலே, பிறைச்சந்திரன்போன்ற தந்தங்களுடைய ஓர் ஆண்யானை தன் கையிலிருந்து கொடுப்பதைப் பார்]

என்று இராகவன் காட்டுகின்றான். இவ்வாறே பின்னும், "மெய்கள் நோகின்ற பிடிகளை விரும்பிய வேழம் கைகள் நோகில தாங்கி" நிற்கக் காணலாம். இன்னணம், இவ்விரு வரைகளிலும் வைகிய வேழங்கள் தம் இல்லறம் உய்க்குந் திறத்தில் ஒருபடித்தாய் ஒழுகுகின்றனவெனினும், சான்ற மாதவர் தங்கிய இச்சிலம்பினில்,

வளைகள் காந்தளிற் பெய்தன வனையகைம் மயிலே
தொளைகொடாழ்தடக் கையெனுந்துருத்தியிற் றாக்கி
அளவில் மூப்பின ரருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணாய்.

[காந்தள் மலரில் வளைகளிட்டது போன்ற கைகளையுடைய மயில்போன்றவளே - அளவில்லாத மூப்பை எய்திய அரும் தவசிகளுக்கு, பெரிய யானைக்கன்றுகள், மலையருவி நீரை, தொளையுடைய தாழ்ந்த தம் பெரிய துதிக்கையாகிய தோற்பையிலே மொண்டு கொணர்ந்து அம்முனிவர்களது கமண்டலத்தில் சொரிபனவற்றைப் பார்]

என்று இராமன் சீதைக்குக் காட்டியதற் கொத்ததோர் செய்தி சந்திரசயிலத்தில் நிகழ்ந்திலது. மீண்டும், சந்திரசயிலத்தில்,

சரம்பயில் சாப மென்னப் புருவங்க டம்மி னுட
நரம்பினோ டினிது பாடி நாடக மயிலோ டாடி [ரம்
அரம்பையர் வெறுத்து நீத்த அவிர்மணிக் கோவை யா
மரம்பயில் கடுவண் பூண மந்திகண் டுவக்கும் மாதோ

[அம்புபொருந்திய வில்லைப்போன்ற புருவங்கள் வளைந்தும் நிமிர்ந்தும் ஆட, யாழின் நரம்போடு இனிது பாடி, நடிக்கின்ற மயிலுக்கு எதிராக நடித்து, அரம்பையர் கழித்துவிட்ட பிரகாசிக்கின்ற இரத்தினமாலைகளை, மரத்திலுள்ள ஆண்குரங்கு எடுத்து அணிந்துகொள்ளவும் அதனைப் பார்த்துப் பெண்குரங்கு களிக்கும்]

அதற் கொருவாறிணங்க இந்தச் சித்திரகூடமலையிலும்,

ஒருவில் பெண்மையென் றுரைக்கின்ற வுடலினுக்
மருவு காதலி னினிதுட னுடிய மந்தி [குயிரே
அருவி நீர்கொடு வீசத்தா னப்புறத் தேறிக்
கருவி மாமழை யுதிர்ப்பதோர் கடுவனைக் காணாய்

[பெண்கள் என்று உரைக்கப்படுபவரெல்லாம் உடலேயாக அப்பெண்மைக்கு நீங்காத ஓர் உயிர்போன்றவளே— பொருந்திய காதலினால் மனமகிழ்ச்சியோடு தன்னுடன் நீராடிய பெண்குரங்கு அருவியின் நீரைத் தன்மேல் வீசவும், மற்றொருபக்கம் ஏறிப் பெரிய மேகத்தின் நீரை அப்பெண்குரங்கின்மேல் குலுக்கி உதிர்க்கின்ற ஆண்குரங்கைக் காண்]

என்றும்,

அறைக ழற்சிலைக் குன்றவ ரகன்புனங் காவற்
பறையெ டுத்தொரு கடுவனின் றடிப்பது பாராய்

[ஒலிக்கின்ற வீரக்கழலையும் வில்லையும் உடைய குறவர் அகன்ற தம் புனத்தைக் காப்பதற்கு வைத்துள பறையை எடுத்து ஒரு ஆண்குரங்கு நின்றுகொண்டு அடிப்பதைக் காண்]

என்றும் காட்டியபடி குறும்புச் செய்கையிலும் காதற் சரசலீலைகளிலும் அந்தச் சந்திரசயிலக் குரக்கினத்தோடு சித்திரகூடக் குரங்குகளும் உறவுகொள்கின்றன வெனினும், முனிவர் வாழ்வதால் புனிதமாய இவ் விலங்கலின்கண்,

வடுவின் மாவகி ரிவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணின ரிடருறு மூப்பின ரேக
நெடுகு கூனல்வா னீட்டின வுருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய்.

[குற்றமற்ற மாவடுப்போல் விளங்கும் கண்களையுடைய மயில் போன்றவளே—இடுகிய கண்ணும் கால்தளர்ந் திடர் செய்யும் மூப்பும் உடைய மாதவர்களுக்கு, நீண்டு வளைந்த தம் வாலை நீட்டித் தடிபோல் கொடுத்து அன்பினால் நெஞ்சுருகும் ஆண்குரங்குகள், அவர் ஏகுவதற்கு அரியவழியைக் காட்டுவதைக் காண்]

என்று சீதாபிராட்டி கண்ணுற்றவாறு, பிறர்க்குதவி செய்யுங் குணத்தினைச் சந்திரசயிலக் குரங்கின்பால் கம்பர் நமக்குக் காட்டினாரலர். மற்று, களிறுங் கடுவனுமன்றி இவ்விரு பிறங்கல்களி லுறைதரும் மனிதர் மாட்டும் இவ்வேற்றுமை யிருக்கின்றது. சந்திரசயிலத்தில்,

கொதிநுனை வேற்கண் மாதர் குறத்தியர் நுதலி னோடு
மதியினை வாங்கி யொப்புக் காண்குவர் குறவர் மன்னோ

[கொதிக்கின்ற நுனியையுடைய வேல்போன்ற கண்களையுடைய குறத்தியரது நெற்றியோடு, குறவர் பிறைச்சந்திரனை எடுத்து ஒப்புநோக்குவார்]

என்றாராதலின் மனைவியர்தம் மேம்பாடு தோன்றற்கே மதியினை வாங்க நேர்ந்தது. மற்றுச் சித்திரகூடத்தினின்று பிறைமதி பிடிக்கப்பட்டதெனின் அதுவும் அம்மதியின் நலத்திற்காகவே இருக்குமென்பதை,

பிறையை யெட்டினள் பிடித்திதற்
கிதுபிழை யென்னுக்
கறைது டைக்குறு பேதையோர்
கொடிச்சியைக் காணாய்.

[பிறையை எட்டிப் பிடித்து, இத்துணை ஒளியுடைய இதற்கு இம்மறு இருத்தல் தகாது என அதன் களங்கத்தைத் துடைக்கின்ற ஓர் பேதைக் குறத்தியைக் காண்.]

என்று இராமன் சீதைக்குக் காட்டுமச் செவ்வியில் நாமுங் காணலாம். இன்னபடியே இந் நற்றவருறையும் நகத்தினூடு,

ஐவனக்குர றினைக்கதி ரிறுங்கவை யவரை
மெய்வணக்குறு வேயின மீன்றமெல் லரிசி
பொய்வணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவணத்தவாய்க் கிள்ளைதந் தனிப்பன காணாய்

[மலைநெல்லின் கதிரையும் தினைக்கதிரையும் சோளத்தின் கதிரையும் அவரைக்காய்களையும் வளைந்த மூங்கிலின் அரிசியையும், உன் கைபோன்ற வாய்களையுடைய கிளிகள், பொய்ம்மை யார்மாட்டுஞ் செல்லாமல் அதனை வணக்கி அடக்கிய தவசிகளின் ஆசிரமங்களிற்சென்று அன்போடு கொடுப்பனவற்றைக் காண்]

என்றும்,

பாந்த டேரிவை பழிபடப் பரந்தபே ரல்கு
லேந்து நூன்மணி மார்பின ராகுதிக் கியைந்த
கூந்தன் மென்மயில் குறுகின நெடுஞ்சிறை கோலிக்
காந்து குண்டத்தின் வயங்கெரி யெழுப்புவ காணாய்

[பாம்பின் படமும் தேர்த்தட்டும் உவமையாகாமல் பழிப்படையும்படி பரவிய பெரிய அல்குலை யுடையவளே— தோகையுடையமெல்லிய மயில்கள் நெருங்கி, பூணூலுடைய அழகிய மார்புடைய அந்தணர் ஓமஞ் செய்வதற்கமைந்த காந்துகின்ற குண்டங்களினுள்ளே நெருப்பை, தம் நீண்ட சிறகை விரித்து விசிறி எழுப்புவனவற்றைக் காண்]

என்றும், காட்டுகின்ற காட்சிகளெல்லாம் அம் மலையின்கண் வசிக்கும் எவ்வுயிரும் பிறர்க்கு உதவிசெய்து உவப்பதே கருமமென்ற கொள்கையாற்றெளிந்த மதியின வென்பதையே விளக்குகின்றன. பன்றியுங் கிழங்ககழ்ந்து வந்தவ் வேதியர்க்குக் கொடுக்குமாம். மையல் மத வாரணங்களும், தன்னழகே தலைக் கொண்ட மென்மயிலும், குறும்புசெய் குரக்கினங்களும், செய்யவாய்ப் பைஞ்சிறைச் சுகங்களும், விலங்கினத்திலே இழிந்ததென்ற பன்றிகளுமன்றி,

[விழுங்குங்
இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்துடன்
கடிய மாசுணங்கள் கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிக ளாமெனத் தாழ்வரை கிடப்பன காணாய்

[இடிபோல் பிளிறுகின்ற யானையைத் தந்தத்துடன் விழுங்குகின்ற கொடிய பாம்புகள் கற்றறிந்தவரைப்போல் அடக்கமுடையனவாகி, சடையுடையவர்களும் குறைவற்ற

தவமுடையவர்களுமான அந்தணர்கள் மிதித்தேறும்படி படிகளாக மலையடிவாரங்களில் கிடப்பனவற்றைக் காண்]

எனக் காட்டுதற் குரியதாயிற்றென்றால் சித்திரகூடத்தின் சிறப்பை வேறு செப்பலும் வேண்டுமோ. கடிய மாசுணமும் படியென அடங்கிக் கிடந்த இச்செவ்விய விந்தையில் இராமனே முற்றிலும் ஈடுபட்டுவிட்டதாற்றுனே, மற்றைய காட்சிகளைக் காட்டுமுன் சீதையைப் பல புகழ்மொழிகளால் அழைத்தவன் இங்கு அவளை அழைத்துக்கூறவும் அமையாளுகி விடயத்தின் விந்தை விளம்புதற்கே விரைந்தவனுயினன்.

கற்றுய்ந்து அடங்குவார் பெற்றியைத் திருவள்ளுவர் மொழிகொண்டு யாவரும் உணர்வர். மற்று, மாசுணத்திற்கு இங்குக் கற்றுய்ந்தடங்கினேரை உவமையாக்கிய பெருமை உட்கொளற்குரியது. இப்பாந்தளோ, கற்றதும் இல்லை ஆய்ந்ததுமில்லை. ஆயினும் அவைதாம் பயின்று அடங்கினவரைப் போன்றே தமதாற்றலை எல்லாம் அகற்றி அடக்கமே பூண்டனவாயின. இதற்குக் காரணம், தூய சிந்தையும் சீலமும் செய்தவமும் முற்றிய சான்றோர் அவ்வயின் இருத்தலேயன்றி வேறன்று. கொடுமையின்றி அடங்கி வாழ்வதற்கு அத்துணைபேர்களும் கற்றவர்க ளாதல் வேண்டுமென்பது அவசியமில்லை. முன் வனம்புகுபடலத்தில், சான்றோர் சிலரிருப்பின் ஏனையோர் முயற்சி யாதுமின்றியே எல்லா நலங்களும் மேன்மையும் தீதறு குணங்களுஞ் சென்று தாமே சேரும் என்ற வாய்மையையே மீண்டுமிங்குக் குறிக்கொள்கின்றார் கம்பர். "பொய்வணக்கிய மாதவர்" என்றச் சீலமுடையசான்றோர்களை இதற்கு முன்பாட்டில் இயம்பியதன் கருத்து மிதுவே. பொய்ம்மையாரிடத்துஞ் செல்லமாட்டாமல் வணக்கப்படுவது பெரியோரிருக்கைபாலேயே பிறரெல்லாம் பெறுகின்ற பேறு. இதனுற்றான் சந்திரசயிலத்தின் செய்திகள் சித்திரகூடத்தின் செய்திகளினின்று வேறுபடுகின்றன. இத்தகைய தவசிகள் வைகும் இடங்களையும், அவ்விடங்களில் இராகவன் காட்டிய காட்சிகளையுங் கருதுங்கால்,

வடங்கொள் பூண்முலை மடமயி லேமதக் கதமா
வடங்கு பேழ்வயிற் றரவுரி யமைதொறுந் தொடக்கித்
தடங்க டோறுநின் றுடுவ தண்டலை யயோத்தி
நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்

[ஆரங்களாகிய அணிகலன்களை யணிந்த முலைகளையுடைய இள மயில் போன்றவளே—மதங்கொண்ட வேகமுடையயானைகள் அடங்கும் பெரிய வயிற்றையுடைய பாம்புகளின் மேல்தோல்கள் இங்குள்ள மூங்கில்களில் சிக்கி இருந்து எங்கும் ஆடுகின்றவை, சோலைகள் சூழ்ந்த அயோத்தியில் மாளிகைதோறும் அசைகின்ற துணிக்கொடிகள் ஒப்பனவற்றைக் காண்]

என்று கூறுவது, புண்ணியப் பெருநகர் அயோத்தியைப்பற்றி யல்லாமல் வேறோர் நகரத்தைப்பற்றியதாயின், நாகரிகப் பெருமையைப் பரந்துகாட்டும் கொடிகளெல்லாம் அரவின் உரிவையேதானோ வென வினவ வேண்டி நேரிடும்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றுவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு "	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

மதிப்புரை:—'உடற்பயிற்சி விளக்கம்' என்னும் நூல் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர், பொன்னமராவதி—வலம்புரியில் வசிக்கும் A. V. S T. சொக்கலிங்கம் செட்டியாராவர். உடல் நலன் பெண்நலன் என்ற வேறு நூல்களையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார். வாழ்க்கையில்இனிமையும்இன்பமும் நிறைந்தமையை விரும்புபவர்க்கு உடற்பயிற்சியின் இன்றியமையாமையை இந்நூல்விளக்குவதாகும். உடற்பயிற்சி,உடற்கட்டு, பலம், மலச்சிக்கல், நோய்க்கிடங்கொடாமை, புகையிலை, தாதழிவு என்ற தலைப்புக்களின்கீழ் விஷயம் விளக்கப்பட்டுள்ளது. 88பக்கங்கள் கொண்ட இச்சிறுநூல் நல்ல காகிதத்தில் செவ்விய முறையில் ஆக்கப்பட்டுளது. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைத் தலைமைத் தமிழாசிரியர் மு. அருணாசலம் பிள்ளை அவர்களும், தனவைசிய நாட்டுச் சாண்டோ எனக் கொண்டாடப்பெறும் ஸ்ரீமான் M. L. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், முகவுரையும், புகழுரையும் தந்துளர். நூலின் விலை அணு 6. வேண்டுவோர் ஆசிரியருக்கோ அல்லது கீழச்சிவல்பட்டி சாண்டோ சோமசுந்தரம் செட்டியாருக்கோ எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

***

புதியவரி:—

இந்திய அரசாங்க பண இலாக்காத் தலைவரான ஸர். ஜியார்ஜ் ஷூஸ்டர் சென்றவாரம் புதிய வரித்திட்டம் ஒன்றைத் தயாரித்து இந்தியச் சட்டசபையின் அங்கீகாரத்திற்கு விடுத்தார். அத்திட்ட விவரம் வருமாறு:—

1. பருத்தியின் மீது பவுண்டுக்கு ஆறு பைசா இறக்குமதி வரி.

2. இயந்திரங்களின் மீது 10% இறக்குமதி வரி.

3. சாய வகைகளின் மீது 10% இறக்குமதி வரி.

4. பழுப்புச் சர்க்கரையின்மீது இறக்குமதி வரி அந்தர் 1க்கு ரூ. 6-12 லிருந்து ரூ. 7-4-க்கு உயர்வு.

5. பூட்ஸ், அரை பூட்ஸ் இவைகளின் மீது மார்க்கெட் விலைப்படி இறக்குமதி வரி 20% லிருந்து மார்க்கெட் விலைப்படி 25% அல்லது ஜதைக்கு 4 அணு அதிக வரி.

6. செயற்கைப் பட்டுநூலுக்கு மார்க்கெட் விலையின் மேல் 15% இறக்குமதி வரி. அதாவது 10% லிருந்து 15% ஆக உயர்வு.

7. செயற்கைப் பட்டுப் பீஸ்கள், கற்பூரம், எலெக்டிரிக் பல்புகள் இவைகளின்மீது விதிக்கப்பட்டு வந்த 20% இறக்குமதி வரி மார்க்கெட் விலையின் மேல் 40% ஆக உயர்த்தப் படும்.

8. ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு 1999 ரூபாய்க்குட்பட்ட வருமானங்களுக்கு இந்த வரவுசெலவு வருஷத்தில் ரூபாய்க்கு இரண்டு தம்படி வீதமும் அடுத்த வரவு செலவு வருஷத்தில் நாலு தம்படி வீதமும் வரி.

9. இப்பொழுதுள்ள வருமான வரியில் அரைக்கால் பங்கு இந்த வரவு செலவு வருஷத்திலும் அடுத்த வரவு செலவு வருஷத்தில் கால் பங்கும் ஸர்சார்ஜ் (உயர்வு)

10. உப்பு உள்பட எல்லாக் கலால் வரிகளில் கால் பங்கு ஸர்சார்ஜ் (உயர்வு)

11. இப்பொழுதுள்ள உள்நாட்டுத் தபால் கட்டணங்கள் 100-க்கு 50-க்கு வீதம் உயர்த்தப்படும். அதாவது தபால்களுக்கு ஒன்றரை அணு வீதமும் கார்டுகளுக்கு முக்கால் அணு வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும்.

12. உப்பு உள்பட கலால் வரி உயர்வுகள் செப்டம்பர் மாதம்30-ந் தேதி காலையிலிருந்து அனுஷ்டானத்தில்வரும். தபால் கட்டணங்களில் உயர்வு இனிமேல் ஆலோசனை சபையுடன் கலந்து கவர்னர் ஜெனரல் நிர்ணயிக்கும் தேதியிலிருந்து அனுஷ்டானத்தில் வரும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும் [?]



டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட்

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

188937
72
m2H M1 76K N
M 31.4.34

KALANILAYAM.
REG. No.: M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரு 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)